வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 03 04.05.2022 புதன்கிழமை இதழ் : 149 பக்கங்கள் : 16

# இன்று பதவி விலகுகிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

## புதியவராக டலஸ் அல்லது நிமால்? 10 பேருடன் புதிய அமைச்சரவை!



**கொழும்பு, மே 04**

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நெருக்கடிகளின் உச்சம் காரணமாகப் பதவி விலக இணங்கியுள்ளார். பிரதமர், இன்றைய தினம் பாராளுமன்றில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து தனது பதவி விலகலையும் அறிவிப்பார் என்று கொழும்பின் உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.**

இதனிடையே, புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக டலஸ் அழகப்பெரும அல்லது நிமால் சிறிபால டிசில்வா பதவியேற்கலாம் என்றும் 10 பேர் கொண்ட புதிய அமைச்சரவையும் பொறுப்பேற்கும் எனவும் அந்த உயர் வட்டாரங்கள் குறிப்பிட்டன.

மேலும், பொதுஜன பெரமுன கட்சி, அரசாங்கத்தை விட்டு விலகிய தைத் தொடர்ந்து

15





# நாளை மறுதினம் நாடு ஸ்தம்பிக்கும்!

## நிர்வாக முடக்கலுக்கு அழைப்பு

கொழும்பு, மே. 04

மக்களின் போராட்டத்தை வலுப்படுத்தும் முகமாக நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நாடு தழுவிய ஹர்த்தாலை நடத்த தொழிற்சங்கங்கள் திட்டமிட்டுள்ளன.

இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்கு தெரிவித்த தேசிய தொழிற்சங்க கூட்டமைப்பின் உறுப்பினர் கே.டி. லால்காந்த, யார் போராடினாலும் மக்களுக்கு தேர்தலை வழங்குவதும்

15

# அவுஸ்திரேலிய ஊடகத்தின் குற்றச்சாட்டை மறுத்த நாமல்

கொழும்பு, மே. 04

ஒஸ்பென் மெடிக்கல் மற்றும் அவுஸ்திரேலியாவில் நடந்ததாகத் தெரிவிக்கப்படும் சந்தேகத்துக்குரிய பண மோசடியுடன் தமது குடும்பத்துக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை வைத்தியசாலையின் நிர்மாணப் பணியின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிப் பரிவர்த்தனைகள் தொடர்பான தகவல்களை சர்வதேச ஊடகமான ஏபிசி நியூஸ் அம்பலப்படுத்தியுள்ளது.

குறித்த வைத்தியசாலைக்கு

15

# "ராஜபக்ஷக்களின் கௌரவங்களை மீளப் பெறுங்கள்"

கொழும்பு, மே 04

ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட அனைத்து கௌரவங்களையும் மீளப்பெறுமாறு பௌத்த பீடங்களிடம் நாடளாவிய ரீதியில்

15

# இலங்கை மக்களுக்கு உதவி செய்ய நன்கொடை வழங்க முன்வாருங்கள்



## தமிழக முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை

சென்னை, மே. 04

இலங்கை மக்களுக்கு உதவி செய்ய நன்கொடை அளிக்க முன்வரவேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று செவ்வாய்க்கிழமை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில்

15

# பஸிலின் சொத்துகள் நடேசனின் பெயரில்!

## அனுர வெளியிட்ட தகவல்



கொழும்பு, மே. 04

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் சொத்துக்களில் பெரும்பாலானவை வர்த்தகர் திருகுமார் நடேசனின் பெயரில் உள்ளன என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மோசடி மற்றும் ஊழலை அம்பலப்படுத்த நேற்று செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

4100 மில்லியனுக்கான ஜின்

15

# நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் நேற்று சபாநாயகரிடம் கையளிப்பு!

கொழும்பு, மே. 04

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான தனித்தனி நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று சமர்ப்பித்தது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் பிரேரணைகள் கையளிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக் ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சம்பிராதயபூர்வமான தாகவே கையளிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் மீதான நம்பிக்கையை பாராளுமன்றம் இழந்து விட்டதை வெளிப்படுத்தவே

15

# நம்பிக்கையில்லா தீர்மானம் எதிர்க்கட்சிகள் ஆலோசனை!

## சுமந்திரன் எம். பியும் பங்கேற்பு

கொழும்பு, மே 04

ஜனாதிபதி, அரசாங்கத்துக்கு எதிராக கொண்டுவரப் படவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் நேற்று எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் கட்சிகள் கூடி ஆராய்ந்தன. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பியுமான எம். ஏ. சுமந்திரனும் பங்கேற்றார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்,

15

# சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு கோட்டாவை தலைவராக்க முயற்சி?

கொழும்பு, மே. 04

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நியமிக்க முயற்சிகள் நடப்பதாக சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டு உள்ளது.

இது தொடர்பாக அந்த இணையத்தளத்தில் வெளியான செய்தியில்-

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை உறுப்பினர்கள் குழு ஒன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தலைவராக நியமிக்க முன்வந்து உள்ளதாக அரசின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பஸில் ராஜபக்ஷ அரசியலில் இருந்து நீக்கியமையே அரசுக்குள் உருவாகியுள்ள உள்முரண்பாடுகளுக்கு பிரதான காரணம் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தற்போது பொதுஜன பெரமுனவின் தலைவராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் தேசிய

15



# ஐ. தி. சம்பந்தன் காலமானார்!

லண்டன், மே 04

ஈழத்தின் மூத்த தொழில்சங்கவாதியும் எழுத்தாளரும், சமூக சேவ

15

# புதிய அரசமைப்பு குறித்து ஆராய அமைச்சரவை உப குழு நியமனம்!

கொழும்பு, மே. 04

புதிய அரசமைப்பு குறித்து ஆராய அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான நாலக கொடஹேவா நேற்று தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு வரைபைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் சட்டத்துறை நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது…!

இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் கே. அண்ணாமலை இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமைதான் கடந்த இரண்டு நாட்களாக பேசுபொருளாகியிருந்தது.

திராவிடக் கட்சிகளின் கோட்டையாக இருந்த தமிழகத்தில், பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக தலைமையை அண்ணாமலை பொறுப்பேற்ற பின்னர், நிலைமை மாற்றமடைந்து வருகின்றது.

தமிழகத்தை பல தசாப்தங்களாக மாறிமாறி தி. மு. கவும் அ. இ. அ. தி. மு. கவுமே ஆட்சிசெய்து வருகின்றன.

ஜெயலலிதாவுக்குப் பின்னர், அ. இ. அ. தி. மு. கவில் அதன் பலகோடி தொண்டர்களைக் ‘கட்டிப்போடக்’கூடிய தலைவர் ஒருவர் இல்லாததால் அது தடுமாறிக்கொண்டிருக்க, பாரதிய ஜனதா கட்சி அங்கு வேகமாக வளர்ந்து வருகின்றது.

அதிலும் குறிப்பாக, அண்ணாமலை தலைமைப் பதவிக்கு வந்த பின்னர் அதன் செயல்பாடுகள் தீவிரமடைந்திருக்கின்றன. இந்நிலையிலேயே அண்ணாமலை இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

மலையகத்தில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்துகொள்வதற்காக இலங்கை வந்திருந்த அவர், வடக்குக்கும் விஜயம் செய்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தித்திருந்த அண்ணாமலை, வடக்கு மாகாண முன்னாள் முதல்வரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரனை அவரின் இல்லம் தேடிச்சென்று சந்தித்திருப்பதை கவனிக்க வேண்டும்.

அவரை சந்தித்த பின்னர், தனது ருவிட்டர் பக்கத்தில் ‘இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர், மற்றும் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் திரு. விக்னேஸ்வரன் அவர்களைச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. அவர் மிகவும் நுண்ணறிவான விவாதம் நடத்தினார்’ என்று பதிவிட்டிருக்கிறார்.

முதலில் விக்னேஸ்வரன் எப்போது இலங்கையின் பிரதமர நீதியரசராக இருந்தார் என்பதை அவரிடம்தான் கேட்டு அறியவேண்டும். அவர் உயர்நீதிமன்ற நீதிபதியாக மாத்திரமே இருந்திருக்கிறார். தான் சந்திக்கின்ற ஒருவரை, அல்லது தான் விரும்புகின்ற ஒருவரை கௌரவப்படுத்த வேண்டும் என்பதற்காக இதுபோன்ற வார்த்தைகளை சர்வ சாதாரணமாக நம்மவர்கள் பயன்படுத்துவது வழக்கமானதுதான்.

நாம் விரும்பியோ விரும்பாமலோ இருந்தாலும், தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்பது இன்றுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசமே இருக்கின்றது. ஓர் அரசியல் தலைவராக ஈழத்தமிழ் மக்களின் அரசியல் தலைமையைச் சந்திக்கவேண்டும் என்றால் அது கூட்டமைப்பினரைத்தான் சந்திக்கவேண்டும். அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்த அண்ணாமலை, அவர்களை தனியார் விடுதி ஒன்றில் சந்தித்திருந்தார். ஆனால், தன்னைச் சந்திப்பதற்காக அவர், அவர்களை ஒரு மணி நேரம் காக்கவைத்திருந்த செய்தியை ‘ஈழநாடு’ வாசகர்கள் படித்திருப்பார்கள்.

ஓர் இனத்தின் தலைவர்களை சந்திக்க விரும்பிய ஒரு மாநில தலைவர், அவர்களை ஒரு மணி நேரம் காக்க வைத்திருந்தார் என்ற செய்தியைப் படித்தபோது இந்தச் சம்பவம் ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

இந்திய வெளியுறவு அமைச்சர் சு. ஜெய்சங்கர் அண்மையில் இலங்கை வந்திருந்தபோது, யாழ்ப்பாணத்தில் இந்திய உதவியுடன் கட்டப்பட்ட யாழ்ப்பாண கலாசார நிலையத்தை (பின்னர் பலரின் வேண்டுகோளின் பேரில் யாழ்ப்பாண பண்பாட்டு மையம் என்று அழைக்கப்படுவதை குறிப்பிடவேண்டும்) திறந்து வைத்தார். கொழும்பிலிருந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், ஜெய்சங்கரும் இணையவழியில் அதனைத் திறந்து வைத்திருந்தனர். அதற்கான விழா யாழ். கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது, யாழ்ப்பாணத்திலுள்ள வி. ஐ. பிக்கள் அழைக்கப்பட்டு, அரங்கம் நிறைந்திருந்தது.

அங்கு வந்திருந்தவர்களை வி. ஐ. பிக்கள் என்று நான் குறிப்பிடுவது, இந்த விழாவுக்கு பகிரங்க அழைப்பு விடுக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள துணைத் தூதரகமே தனிப்பட்ட வகையில் அவர்கள் ஒவ்வொருவரையும் அழைத்திருந்தது. அவ்வாறு அழைப்பதெனில் அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ளவர்களில் விசேடமானவர்கள் என்று தூதரகம் கணித்த பிரமுகர்கள்தாம்.

இவ்வாறு தாம் அழைத்த பிரமுகர்களையும் சுமார் ஒருமணி நேரம் காக்கவைத்தே அந்த திறப்பு விழா நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. அவ்வாறு தாமதமாக ஆரம்பிக்கப்பட்டபோதும், அதற்காக ஒரு வருத்தம் தெரிவிக்கவேண்டும் என்ற சாதாரண நடைமுறைகூட காட்டப்படவில்லை. அதன் அர்த்தம் என்ன என்பது புரிந்தவர்களுக்குத்தான் புரியும்.

அதே மனநிலையிலேயே, இப்போது தமிழ் மக்களின் அரசியல் தலைமையும் நடத்தப்பட்டதா என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

**- ஊர்க்குருவி**

# ஹரினுக்கு எதிராக சஜித்திடம் சரத் பொன்சேகா முறைப்பாடு!

கொழும்பு, மே. 04

“ஹரின் பெர்ணான்டோவுக்கு எதிராக கட்சி தலைமையிடம் முறையிடப்படும்.” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மேதினக் கூட்டம் கடந்த ஞாயிறு இடம்பெற்றது. இதன்போது பொன்சேகாவுக்கும், ஹரினுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.

இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டார்.

“மே தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் பொறுப்பு ஹரின் பெர்ணான்டோவிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், சில தவறுகள் இடம் பெற்றன. பேச்சாளர்களின் பட்டியலில் எனது பெயர் இருக்கவில்லை. ஒரு சிலர் திட்டமிட்ட அடிப்படையில் ஓரங்கட்டியுள்ளனர். இதனால் மேலும் சில எம்.பிக்கள் அதிருப்தியில் இருந்தனர். இது தொடர்பில் கட்சித் தலைவரிடம் முறையிடப்படும். தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.” - என்றும் பொன்சேகா குறிப்பிட்டார். (அ)

# குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு கொடுப்பனவு

கொழும்பு, மே 04

பொருளாதார நெருக்கடிகளால் சிரமங்களுக்குள்ளாகியுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு உதவி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கு அமைவாக சமுர்த்தி, வயோதிப, சிறுநீரக மற்றும் வலுவிழந்தோர் கொடுப்பனவுக ளைப் பெறும் குறைந்த வருமா னம் கொண்ட குடும்பங்கள் தற்போது வழங்கப்படும் கொடுப்பனவு தொகை பொது வாக ரூபா 2500 ரூபாவினால் அதிகரிக்கப்படுகிறது. இது தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச் சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பின்வருமாறு:

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளால் சமுர்த்தி, வயோதிப, சிறுநீரக மற்றும் வலுவிழந்தோர் கொடுப்பனவுகளைப் பெறும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அக்கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக காத்திருப்புப் பட்டியலிலுள்ள குடும்பங்களுக்கு துரிதமாக உதவி வழங்க வேண்டிய தேவையை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது.

உலக வங்கிக் குழும நிதியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கருத்திட்டமான குறிப்பீடற்ற துரித பதிலளிப்பு பிரிவின் மூலம் அதற்கான நிதி வழங்குவதற்கு உடன்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, அடையாளம் காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களுக்கு மே மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை குறித்த உதவிகளை வழங்குவதற்கான விசேட கொடுப்பனவு நடவடிக்கைகள் தொடர்பாக நிதி அமைச்சர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## கொடியேற்றம்!

யாழ்ப்பாணம், மே 04

பிரசித்திபெற்ற பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை திருத்தல வருடாந்த திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலையில் இடம்பெறும். 12 ஆம் திகதி மாலை நற்கருணை வழிபாடுகள், ஆசீர்வாதமும்,13 ஆம் திகதி காலை திருவிழா கூட்டுத்திருப்பலி, அன்னையின் திருச்சொரூப பவனியுடன் திருவிழா நிறைவுறும். (ஐ-2)

## மகா கும்பாபிஷேகம்

தென்மராட்சி, மே 04

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான புனருத்தாரண நவ குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 8.05 மணிமுதல் 10.35 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக பிரதம குரு “கிரியா ரத்னா “சிவஸ்ரீராம் சண்முகானந்தக் குருக்கள், ஆலய பிரதம குரு “சர்வபோதகம் பண்டிதர்” கலாநிதி து. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ ஜெகதீஷ மயூரக்குருக்கள்,சிவஸ்ரீ சோ. பிரசன்னாக்குருக்கள் ஆகியோர் நடத்தி வைப்பர்.

மகா கும்பாபிஷேக வாழ்த்துரையை சிவஸ்ரீ குமாரசுவாமி நாதக்குருக்களும் அருளாசியை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மாவை ஆதீனம் மஹாராஜ ஸ்ரீ து. ஷ. இரத்தினசபாபதிக்குருக்களும் வழங்குவர். (ஐ)

# ராஜபக்ஷக்கள், சஜித் ஊழலை அம்பலப்படுத்தியது ஜே. வி. பி.!

கொழும்பு, மே 04

நாமல் ராஜபக்ஷ, யோசித ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பலர் சம்பந்தப்பட்ட ஊழல்களை அம்பலப்படுத்தும் ஆவணங்களை ஜே. வி. பி. நேற்று வெளி யிட்டது.

அந்தக் கட்சியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க விசேட மாநாட்டில் அரசியல்வாதிகள், முன்னாள் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் பொது நிதியை மோசடி செய்த புலனாய்வு அதிகாரிகள் தொடர்பான 500இற்கும் மேற்பட்ட ஆவணங்கள் தங்களிடம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

நிமல் பெரேரா, திருக்குமார் நடேசன் ஆகியோர் ஊடாக யோஷித ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் பொதுப் பணத்தை மோசடி செய்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பிரான்ஸ் எயார் பஸ் ஒப்பந்தம், ஜின் நில்வள திட்டம், க்ரிஷ் உடன்படிக்கை, ஹெட்ஜிங் ஒப்பந்தம், ஹலோ கோர்ப் ஒப்பந்தம் ஆகிய கோப்புகளே வெளிப்படுத்தப்பட்டன.

மத்திய கலாசார நிதியத்தின் 300 கோடி ரூபாய் நிதியை முறையான அனுமதியின்றி சஜித் பிரேமதாஸ துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்றும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். (ஐ)

# பாராளுமன்ற சுயாதீனக் குழுவினர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் சந்திப்பு

கொழும்பு, மே 04

தேசிய பொது இணக்கப்பாட்டு அரசாங்கத்தை ஸ்தாபிப்பது குறித்த பாராளுமன்ற சுயாதீன குழுவினருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியினருக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம் பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடந்தது.

இதன்போது, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார முறையினை நீக்குவது, தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கத்தில் பொறுப்புக்களை ஏற்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஷா தெரிவித்தார்.

நாடு பாரிய பொருளாதா நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில் அரசியல் நோக்கமின்றி, நாடு என்ற ரீதியில் ஒன்றிணைவது குறித்தும் இந்த சந்திப்பின்போது தெளிவூட்டப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை, அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அமைச்சரவையின் இணைப்பேச்சாளர் நாலக்க கொடஹேவா, தற்போதைய அமைச்சரவையின் எதிர்காலம் இந்த வாரத்தில் தீர்மானிக்கப்படும் என கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu
04.05.2022 புதன்கிழமை
பிலவ வருடம், சித்திரை 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## தமிழர் அரசியலில் கோரிக்கைகள்?

அரசியலில் கோரிக்கைகளும் அவற்றை அடைவதற்கான முயற்சிகளும் பிரிக்க முடியாதவைகளாகும். ஒவ்வொரு குறிப்பிட்ட சூழலிலும் முன்வைக்கப்படும் கோரிக்கைகள்தான், அரசியலை முன்நோக்கி நகர்த்துகின்றது. அந்த அடிப்படையில், காலத்திற்கு காலம், தமிழர் அரசியல் கோரிக்கைகளை முன்னிறுத்திருக்கின்றது. ஆனால், அந்த கோரிக்கைகள் எவற்றிலும் இதுவரையில் வெற்றிபெற முடியவில்லை. இந்த அனுபவங்களைக் கருத்தில் கொண்டுதான், தமிழர் அரசியல் சமூகம் தனது ஒவ்வோர் அடிகளையும் கவனமாக எடுத்து வைக்கவேண்டும். கடந்த காலத்திலிருந்து, கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இன்று இலங்கைத் தீவு வரலாறு காணாத நெருக்கடி ஒன்றுக்கு முகம் கொடுத்திருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தை முன்னிறுத்தி, தமிழர்கள் உச்சபட்சமான கோரிக்கைகளை முன்வைக்க வேண்டுமென்று, ஒரு சாரார் வாதிட முயற்சிக்கின்றனர். அவ்வாறானவர்கள், இடைக்கால தீர்வு கோரிக்கையொன்றை முன்வைக்க வேண்டும் என்கின்றனர். இது கிட்டத்தட்ட விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வைத்த இடைக்கால தீர்வு போன்றது. இடைக்கால தீர்வு யோசனையொன்றை முன்வைப்பது இன்றைய சூழலில் புத்திசாதுர்யமானதா?

நாட்டில் ஓர் அபிப்பிராயம் பரவலாக ஏற்பட்டிருக்கின்றது. அதாவது, கட்டமைப்பு சார்ந்து சில மாற்றங்கள் தேவையாகும். அதாவது, நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் அல்லது அதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறானதொரு சூழலில் - தமிழ் மக்களின் கோரிக்கைகளை எவ்வாறு முன்வைக்கலாம்? இங்கு கவனிக்க வேண்டிய விடயம், இப்போது, புதிய அரசியலமைப்பு தொடர்பில் பேசப்படவில்லை - மாறாக, இருக்கின்ற அரசியலமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி, நாட்டின் அடிப்படையான அரசியல் கட்டமைப் பில் சில மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பிலேயே பேசப்படுகின்றது. இதற்கு தென்பகுதியிலும் கணிசமான ஆதரவு காணப்படுகின்றது.

இந்த நிலையில் தமிழர்கள் எவ்வாறான கோரிக்கைகளை முன்நிறுத்தலாம்? ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுவது தொடர்பில் பேசப்படுகின்றபோது, மாகாண சபையில் தலையிடும் எல்லலையற்ற அதிகாரத்தை கொண்டிருக்கும் ஆளுநரின் அதிகாரங்களை இல்லாமலாக்குவது தொடர்பில், தமிழர்கள் கோரிக்கைகளை முன்வைக்கலாம். மத்தியின் தலையீடின்றி, மாகாண சபைகள் செயல்படுகின்ற போதே, அதனை தமிழர் பகுதிகளில் உச்சளவில் பயன்படுத்த முடியும். இதே போன்று, சுயாதீன நிறுவனங்களின் தொழில்பாடுகளை உறுதிப்படுத்தும் சட்டமூலங்கள் தொடர்பில் தமிழர்கள் கோரலாம். இவ்வாறான கோரிக்கைகளை தென்பகுதியாலும் நிராகரிக்க முடியாமல் போகலாம். ஏனெனில், இன்றைய சூழலில், கூட்டமைப்பின் முக்கியத்துவம் கனதியானது.

அவ்வாறில்லாது, இடைக்காலத் தீர்வு போன்ற சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைக்கின்றபோது, ஓரளவு வாய்ப்பாக இருக்கின்ற விடயங்களைக்கூட தமிழர்கள் இழக்க நேரிடும். நாம் முன்வைக்கும் கோரிக்கையில் நூறுவிகிதம் வெற்றிபெற வாய்ப்பிருக்கின்றது எனின், நாம் அந்த கோரிக்கையை முன்னிறுத்தத்தான் வேண்டும். ஆனால், தோல்விக்கான அதிக சாத்தியத்தை கொண்டிருக்கும் கோரிக்கைகளை முன்னிறுத்துகின்றபோது, எங்களால், சாதிக்கக் கூடிய விடயங்களையும் நாம் கைநழுவ விடுகின்றோம் - அதே வேளை, எவருக்கு எதிராக அரசியல் சூழல் கருக்கொண்டிருக்கின்றதோ - அவர்களையே மறைமுகமாக நாம் பாதுகாக்கின்றோம். இன்றைய சூழலில், இடைக்கால அரசியல் தீர்வு கோரிக்கைகளை முன்வைப்பது, ராஜபக்ஷக்களுக்கே அதிகம் பயன்படும். அதேவேளை நிறைவேற்றதிகாரத்திற்கு எதிராக அணிதிரள முற்படும் எவரும் இவ்வாறான கோரிக்கைளைக் கண்டதும் சிதறிப் போவர்.

# மல்வத்தை பீடாதிபதியின் “காலம் கடந்த ஞானோதயம்”!

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தற்போது அனைத்து தரப்பினரையும் மிக மோசமான முறையில் பாதித்துள்ளமையடுத்து கண்டியிலுள்ள மிகமுக்கிய பௌத்த பீடமான மல்வத்தை பீடத்தின் பீடாதிபதியான திப்பட்டுவாவே சிறீ சுமங்கல தேரர் தம்மிடம் அரசியல்வாதிகள் எவரும் ஆசீர்வாதம் பெற வரக்கூடாது என எச்சரித்துள்ளார்.

இலங்கையின் ஆட்சியாளர்கள் கண்டியிலுள்ள மல்வத்தை, அஸ்கிரிய பௌத்த பீடாதிபதிகளின் ஆசீர்வாதங்களை பெறு வதையும் அவ்வப்போது அவர்களின் ஆலோசனைகளைப் பெறுவதையும் வழக்க மாகக் கொண்டுள்ளனர்.



நிக்காயாக்கள் என்று உயர் பௌத்த பீடங்கள் அழைக்கப்படுகின்றன. இவற்றில் கண்டியிலுள்ள மல்வத்தை, அஸ்கிரிய பீடங் கள் பிரதானமானவை. இவைதவிர, ராமண்ய, அமரபுர என்ற வேறு இரு பௌத்த பீடங் களுட்பட நான்கு பௌத்த பீடங்கள் இலங்கை பௌத்தர்களின் வணக்கத் துக்குரியவையாக இருக்கின்றன.

இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரை பௌத்த பீடாதிபதிகளின் செல்வாக்கு மிக அதிகமானதாகவே இருக்கின்றது. அவ்வப்போது அரசியல், சமூக, பொருளாதார விடயங்கள் தொடர்பாக பௌத்த பீடாதிபதிகள் அரசுக்கு ஆலோசனைகளை வழங்குவதுண்டு.

தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்தும் நிக்காயாக்கள் என்றழைக்கப்படுகின்ற நான்கு பிரதான பௌத்த பீடங்கள் கடந்த ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி தற்போதைய நாட்டு நிலவரத்தை சீர்செய்வது தொடர்பாக தமது யோசனைகளை முன்வைத்திருந்தன. இந்த யோசனைகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு நான்கு முக்கிய பீடாதிபதிகளாலும் கூட்டாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

ஆனால், இந்த யோசனைகள் ஆட்சி அதிகாரங்களில் உள்ளவர்களால் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்று நான்கு பீடாதிபதிகளும் கூறியிருப்பதோடு தமது யோசனைகள் நிராகரிக்கப்படுமேயானால் மகா சங்கத்தினரின் கூட்டுப்பிரகடனமொன்றை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் எனவும் தெரிவித்துள்ளனர்.

மகா சங்கத்தினரின் கூட்டுப்பிரகடனம் வெளியிடப்படும் பட்சத்தில் பௌத்த பீடங்களின் யோசனைகளை ஏற்றுக்கொள்ளாத அரசியல்வாதிகள் நாட்டிலுள்ள பெரும்பான்மை பௌத்த மக்களால் நிராகரிக்கப்படக்கூடிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம்.

அத்துடன், நாட்டில் பௌத்த வழிபாட்டுத் தலங்களில் மத அனுஷ்டானங்களை மேற்கொள்ள பௌத்த மகா சங்கத்தினர் அரசியல்வாதிகளுக்கு தடை விதிக்கவும் முடியும்.

ஏற்கனவே கொழும்பிலுள்ள அபயராமை விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் ஜனாதிபதி ராஜபக்ஷ, பிரதமர் ராஜபக்ஷ ஆகியோருக்கு தற்போதைய நாட்டு நிலவரம் தொடர்பாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு அபயராமை விகாரதிபதியான முருத்தெட்டுவே ஆனந்ததேரர் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ராஜபக்ஷவினரின் மதிப்புக்குரிய விகாராதிபதியாக இருந்தவர். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின். தேர்தல் கால பிரசார நடவடிக்கைகளுக்கு அபயராமை விகாரையின் கேட்போர் கூடத்தைக்கூட முருத்தெட்டுவே ஆனந்த தேரர் வழங்கி யிருந்தார்.

இருந்தபோதிலும் நாட்டு நிலவரம் தற் போது மோசமடைந்துள்ள நிலையில் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டம் ஆரம்பித்த நாட்களில் அரச தரப்பினரை முருத்தெட் டுவே ஆனந்த தேரர் வன்மையாக கண்டித்திருந்தார்.


ஏற்கனவே, இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான கர்தினால் மல்கம் ரஞ்சித் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் தொடர்பாக நீதி வேண்டி இடையறாது வலியுறுத்தி வருகின்றார். கர்தினால் மல்கம் ரஞ்சித் உயித்த ஞாயிறு குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டோரின் குடும்பத்தினரை அண்மையில் வத்திக்கானுக்கும் அழைத்துச்சென்று பரிசுத்த பாப்பரசரை சந்திக்க வைத்து மன ஆறுதலடைய வைத்திருந்தார்.

இத்தகைய பின்னணியிலேயே மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே சிறீ சுமங்கல தேரர் நாட்டின் இன்றைய பொருளாதார நிலவரத்தை சீர் செய்வது குறித்து தாம் வெளியிட்ட யோசனைகளுக்கு இதுவரை ஆட்சியிலுள்ள மற்றும் எதிர்கட்சியிலுள்ள அரசியல்வாதிகள் பதிலளிக்காமையால் எதிர்காலத்தில் தம்மை அரசியல்வாதிகள் எவரும் சந்திக்கக் கூடாதென தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் பௌத்த பீடாதிபதிகளிடம் ஆசீர்வாதம் வேண்டச்செல்கின்ற நிலையில் அவர்களுக்கும் தமது ஆலோசனைகளை, அறிவுரைகளை வழங்க உரிமையுண்டு.

மறுபுறத்தே மல்வத்தை பீடாதிபதி மட்டுமல்ல. ஏனைய பௌத்த பீடாதிபதிகளும் நாட்டில் மூன்று தசாப்தங்களாக வடக்கு - கிழக்கு யுத்தம் நீடித்தபோது அதனை நிறுத்த அன்றைய ஆட்சியாளர்களுக்கு வடக்கு - கிழக்கு மக்களது நியாயமான அரசியல் தீர்வைப்பெற ஆலோசனை கூறியிருப்பார்களேயானால் இலங்கை பொருளாதார ரீதியாக என்றோ மேம்பட்டிருக்கும். ஆனால், மல்வத்தை பீடாதிபதி திப்பெட்டுவே சிறீ சுமங்கல தேரர் ஆட்சியாளரை தற்போதைய நாட்டு நிலவரம் தொடர்பாக சாடியுள்ளதை நோக்கும் போது அவருக்கு காலம் கடந்த ஞானோதயம் ஏற்பட்டுள்ளதோ என்றே எண்ணத்தோன்றுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 04 புதன்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 21
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
அந்நிய நபர்களின் வழியே உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். உங்களுடைய முயற்சிகளால் லாபமடைவீர்கள். உங்களுக்கு ஏற்படும் செலவால் மனச்சங்கடம் உண்டாகும்.

**இடபம்**
சுபச்செலவு செய்வதால் குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. நீங்கள் எதிர்பார்த்திருந்த நல்ல தகவல் இன்று வந்து சேரும். எதிரிகளால் உண்டான தொல்லைகளை முறியடிப்பீர்கள்.

**மிதுனம்**
அரசு வழியில் நன்மைகள் வந்து சேரும். மகிழ்ச்சியான நாள். உங்கள் கவனக்குறைவால் சில சங்கடங்கள் உண்டாகும். தொழில் மீதான சிந்தனை மேலோங்கும். நட்பு வட்டம் விரியும்.

**கடகம்**
தரும சிந்தனை மேலோங்கும். கோவிலுக்கு செல்வீர்கள். இன்று நீங்கள் நினைத்தது நிறைவேறும். மகிழ்ச்சியான நாள். இருக்கும் இடத்தை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள்.

**சிம்மம்**
உங்கள் செயல்களால் குடும்பத்தில் மகிழ்ச்சி தோன்றும். அந்நியர்கள் வழியே ஆதாயம் காண்பீர்கள். நிதிநிலை கூடும். உடல் நிலைக்காக மருத்துவரை சந்திக்க நேரும்.

**கன்னி**
உங்களுடைய வார்த்தைகளால் சில சங்கடங்களை சந்திப்பீர்கள். குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் வந்து போகும். எதிர்பார்த்த செயலில் தடை உண்டாகி பின்னர் சரியாகும்.

**துலாம்**
மனதில் தேவையற்ற குழப்பங்கள் மேலோங்கும். தொழில், வேலை காரணமாக வெளியூர் பயணம் ஏற்படும். உங்களுடைய வேலை சில இழுபறிக்குப்பின் முடியும்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்த பணம் இன்று உங்களுக்கு வந்து சேரும். உழைப்பிற்கு ஏற்ற ஆதாயம் உண்டாகும். நிம்மதியான நாள். தைரியத்துடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

**தனுசு**
நட்புகளால் சங்கடம் உண்டாகும் என்பதால் எச்சரிக்கைத் தேவை. உங்கள் கவனக்குறைவால் சில நெருக்கடி தோன்றும். யோசிக்காமல் பேசும் வார்த்தைகளால் உறவுகள் பகையாகும்.

**மகரம்**
உங்கள் செயல்பாடுகளில் இன்று கஷ்டத்தை சந்திப்பீர்கள். எதிரிகளின் தொல்லையால் மனதில் கலக்கம் உண்டாகும். குடும்பத்தில் ஒருவருக்கு குழப்பம் நீங்கும் நிம்மதி காணும் நாள்.

**கும்பம்**
துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்பாராத பண வரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். தந்தைவழி உறவுகளிடம் இருந்த மனவருத்தம் நீங்கும்.

**மீனம்**
நீங்கள் மனதில் நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். வருமானத்தில் இருந்து வந்த தடை நீங்கும். உங்கள் செயல்களால் குடும்பத்திற்குள் குழப்பம் தோன்றும்.

# இலங்கைக்கு உதவிப் பொருட்கள் அனுப்ப அனுமதி மத்திய அமைச்சருக்கு முதல்வர் ஸ்டாலின் நன்றி

சென்னை, மே 04

இலங்கை மக்களுக்கு உதவ வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதற்காக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அனுப்ப மத்திய அரசிடம் தமிழக அரசு அனுமதி கோரியது. நேரடியாக பிரதமரை சந்தித்தும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுமதி கோரினார். ஆனால், சாதகமான பதில் வராத சூழலில், அனுமதி அளிக்க மத்திய அரசை வலியறுத்தி சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மானநகலுடன் பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதினார்.

இந்நிலையில், இலங்கை மக்களுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்ப தமிழகத்துக்கு அனுமதி அளித்து, முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கடிதம் எழுதியிருந்தார். இதைத் தொடர்ந்து, மத்திய அமைச்சருக்கு நன்றி தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:



“இலங்கை மக்களுக்கு உதவ வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதற்காக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மனிதாபிமான செயல் அனைவராலும் பெரிதும் வரவேற்கப்படும். இரு நாடுகளுக்கு இடையே புரிதல் மற்றும் நல்லுறவை மேம்படுத்த உதவும் என்றும் உறுதியாக நம்புகிறேன். அனைத்து துறைகளிலும் நல்லெண்ணம் வளரட்டும்” இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டை கருணாநிதி நாடு என பெயரை மாற்றுவார்கள்: ஜெயக்குமார்

சென்னை, மே 04

தமிழ்நாட்டுக்கு கருணாநிதி நாடு என தி.மு.க. அரசு விரைவில் பெயரை மாற்றும் என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

5 கோடி ரூபா நில மோசடி வழக்கில் கைது செயய்யப்பபட்டு பிணையில் வெளிவந்துள்ள அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் 6-வது முறையாக சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஆஜராகி கையெழுத்திட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

“கிழக்கு கடற்கரை சாலை தேசிய அளவில் பிரபலமானது. காஷ்மீரில் இருப்பவருக்கு கூட தெரியும். கிழக்கு கடற்கரை சாலை என்பதே நல்ல அழகான பெயர். இதற்கு கருணாநிதியின் பெயரை வைக்கின்றனர். புதிய திட்டங்களுக்கு கருணாநிதி பெயரை வைத்துக்கொள்ளவதில் தவறில்லை. அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அம்மா உணவகங்களை மூடிவிட்டு, கருணாநிதி பெயரில் புதிய உணவகத்தை திறக்க திட்டமிட்டுள்ளனர். கூடிய விரைவில் தமிழ்நாட்டுக்கு கருணாநிதி நாடு என பெயரை



மாற்றவும் வாய்ப்புள்ளது.

நடிகை சித்ரா மரணத்தில் அ.தி.மு.க. பிரமுகருக்கு தொடர்பு இருப்பதாக கூறினால், காவல்துறை விசாரிக்கட்டும். உண்மையான குற்றவாளிகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கட்டும். கனிமொழிக்கு கட்சியில் எந்த பாத்திரமும் இல்லை. இந்த ஆட்சியில் நிழல் முதல்வர்களாக சபரீசன், உதயநிதி செயல்பட்டு வருகின்றனர். உதயநிதிக்கு மகுடம் சூட முடிவெடுத்து, அவரை முன்னிலைப்படுத்தி வருகின்றனர். வாரிசு அரசியல் நடக்கிறது.-இவ்வாறு கூறினார்.

# தனுஷ்கோடிக்கு இலங்கையிலிருந்து மேலும் 5 அகதிகள் வருகை

ராமேசுவரம், மே 04

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மேலும் 5 அகதிகள் தனுஷ்கொடி வந்தடைந்தனர்.

இலங்கையில் உள்ள வவுனியா மாவட்டம் சிதம்பரபுரத்தைச் சேர்ந்த ராஜலட்சுமி (56), அவரது மகன் தயாளன் (27), மனைவி லதா (26), இவர்களது 2 மகள்கள் உட்பட 5 பேர் இலங்கையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு படகில் புறப்பட்டு திங்கள் அதிகாலை தனுஷ்கோடி கடற்கரைக்கு வந்தடைந்தனர்.

தகவலறிந்து பொலீஸார் அகதிகளாக வந்த இலங்கைத் தமிழர் குடும்பத்தை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்தினர்.

அப்போது இலங்கையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து வருவதால் அங்கு வாழ வழியின்றி தமிழகத்துக்கு அகதிகளாக வந்ததாக தெரிவித்தனர். பின்னர் 5 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். மார்ச் 22 முதல் வந்த இலங்கை அகதிகள் எண்ணிக்கை தற்போது 80ஆக உயர்ந்துள்ளது.

# இன்று தொடங்குகிறது அக்னி நட்சத்திரம்!

சென்னை, மே 04

சித்திரை மாதத்தில் வரும் கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திர காலம் இன்று 4ஆம் திகதி புதன்கிழமை தொடங்குகிறது.

தமிழகத்தில் ஏப்ரல் மாதத் தொடக்கத்திலிருந்தே கோடை வெப்பம் கடுமையாக அதிகரித்து வருகிறது. இதற்கிடையே, கடுமையான வெப்பம் தகிக்கும் என்று கணிக்கப்படும் கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திரம் புதன்கிழமை தொடங்குகிறது. இது மே 28ஆம் திகதி வரை நீடிக்கும்.

தமிழகத்தில் 11 இடங்களில் நேற்று முன்தினம் 100 டிகிரி வெயில் பதிவானது. அதிகபட்சமாக, வேலூரில் 107 டிகிரி வெப்பநிலை வாட்டியது.

பொதுமக்கள் வெயில் காலங்களில் அடிக்கடி தண்ணீர் அருந்துமாறும் லேசான பருத்தி ஆடைகளை அணியவும், இளநீர், நீர்ச்சத்துள்ள இயற்கையான பழவகைகள் போன்றவற்றை உணவாக எடுத்துக் கொள்ளவும்.

செயற்கையான குளிர்பானங்களை தவிர்க்க வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# கொடிகாமத்தில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், மே. 04

கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கொடிகாமம் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தில் கொடிகாமம் - கச்சாய் வீதியைச் சேர்ந்த யோகேஸ்வரன் நிலாந்தன் (வயது 31) என்பவரே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற கப் ரக வாகனமும் , யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்தது.

(அ-03)

# யாழ்ப்பாணத்திலும் நேற்று சிறப்பான நோன்பு பெருநாள்





யாழ்ப்பாணம், மே. 04

இஸ்லாமிய மக்கள் நேற்று புனித ரம்ழான் தின துவாப் பிராத்தனை நிகழ்வுகளை, யாழ். மாவட்டத்தில் அனைத்து பள்ளிவாசல்களிலும் முக்கிய இடங்களிலும் சிறப் பாக முன்னெடுத்தனர்.

யாழ். ஒஸ்மானியக் கல்லூரியின் திறந்த மைதானத்தில் புனித ரம்ழான் தின துவாப் பிராத்தனைகள் இடம் பெற்றன. இந்த துவாப்பிராத்தனையும் குப்த பிரசங் கத்தையும் மௌலவி எ.எச்.ரகீம் நடத்தினார்.

இதில் யாழின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்த இஸ்லாமிய மக்கள் கலந்துகொண்டனர். (அ-03)

# மதுபோதையில் உருவான வாய்த்தர்க்கம் மோதலாக மாறி கொலையில் முடிந்தது!

## வல்லை விருந்தினர் விடுதியில் சம்பவம்



வடமராட்சி, மே. 04

வடமராட்சி உப்புவல்லைப் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் மதுபோதையில் இடம் பெற்ற கோஷ்டி மோதலில் 25 வயதான இளைஞன் உயிரிழந்துள்ளார்.

மது விருந்தில் உருவான வாய்த்தர்க்கமே மோதலில் முடிந்த நிலையில் சாரயப் போத்தல்களை உடைத்து தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் திக்கம் - நாச்சிமார் கோவிலடியை சேர்ந்த 25 வயதுடைய ஞானசேகரம் குணசோதி என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார். குறித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்காகக் கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்தார்.

சம்பவத்தில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த தனியார் விடுதி பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ-02)

# மன்னாரிலும் நோன்பு பெருநாள்



மன்னார், மே. 04

மன்னார் மாவட்டத்தில் உள்ள இஸ்லாமிய மக்களும் நேற்று நோன்புப் பெருநாளை கொண்டாடினர்.

மன்னார் மூர் வீதி ஜூம்மா பள்ளிவாசலில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் பெருநாள் தொழுகைகள் இடம் பெற்றன.

காலை 7 மணிக்கு பெண்களுக்கும் காலை 8 மணியளவில் ஆண்களுக்கும் பெருநாள் தொழுகை இடம்பெற்றது.

இதன்போது நோன்பு பெரு நாளின் முக்கியத்துவம், அல்குர் ஆன் சமய நற்சிந்தனைகள் பற்றியும் இங்கு எடுத்து கூறப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் உள்ள ஏனைய பள்ளிவாசல்களிலும் பெருநாள் தொழுகைகள் இடம்பெற்றன.

(அ)

# வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினரின் வீட்டில் சிலிண்டர் திருடர்கள் கைவரிசை!

யாழ்ப்பாணம், மே. 04

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியில் வசிக்கும் வலி. மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் கிருபாகரன் வீட்டில் நேற்று முன்தினம் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேச சபையின் உறுப்பினரின் குடும்பம் அவரது தங்கையின் மகனது பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக சென்றுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் அவரது வீட்டை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் எரிவாயு சிலிண்டர், கிரைன்டர், வங்கிக் கணக்கு புத்தகம் மற்றும் வங்கி தானியங்கி இயந்திர அட்டை என்பற்றினை இவ்வாறு களவாடிச் சென்றுள்ளனர்.

பிரதேச சபையின் உறுப்பினர் வீட்டுக்கு வந்து பார்த்தவேளை வீடு உடைத்து திருட்டுப் போயிருந்த விடயம் அவருக்கு தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ-03)

# அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளை பா.ஜ.க. தமிழகத் தலைவர் சந்தித்தார்

யாழ்ப்பாணம், மே. 04

தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டு தலைவர் அண்ணாமலை யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

இதன்போது தற்போதைய பொருளாதார நெருக்கடியில் வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள்,அதிலிருந்து மீள்வதற்கான வழிகள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் வடபகுதி பொருளாதார முன்னேற்றத்திற்கு தமிழகத்துடனான தொடர்பு முக்கியமானது என்பது சுட்டிக் காட்டப்பட்டதோடு இது வணிக விருத்திக்கு அவசியமானது போன்ற விடயங்கள் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது பலாலி சர்வதேச விமான நிலையத்தை மீளத் திறப்பதற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் மற்றும் காங்கேசன்துறையிலிருந்து காரைக்காலுக்கான கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக் கையடங்கிய மகஜர் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளிப்பதற்காக சமர்ப்பிக்கப் பட்டது.

'இந்த விடயங்களை டில்லிக்கு எடுத்துச் சென்று நிச்சயமாக விமான நிலையத் திறப்பு மற்றும் கப்பல்போக்குவரத்து என்பவற்றிற்கு ஏற்பாடுகள் செய்வதாக அண்ணாமலை உறுதியளித்தார்.

இந்தச்சந்திப்பில் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் எஸ். யுகேந்திரா, செயலாளர் தே.தேவானந்த் மற்றும் செயற்குழு உறுப்பினர்களான எஸ். இன்பரூபன்,எஸ். திலீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(அ-03)





## விக்னேஸ்வரன் எம்.பியை சந்தித்தார் அண்ணாமலை

யாழ்ப்பாணம், மே 04

பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரனை நேற்று சந்தித்தார்.

நல்லூரில் அமைந்துள்ள விக்னேஸ்வரனின் இல்லத்தில் நேற்றுக் காலை இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமானும் உடனிருந்தார். (அ)

# பொதுஜன பெரமுன தரப்பில் இருந்து புதிய பிரதமர் நியமிக்கப்படமாட்டார்

## பஸில் ராஜபக்ஷ தகவல்



கொழும்பு, மே 04

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு பல்வேறு மட்டங்களில் அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிலையில் புதிய பிரதமர் தொடர்பில் முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கருத்து தெரிவித்துள்ளார்.**

பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களின் அறிவுறுத்தலின்படி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகினாலும் புதிய அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தரப்பில் இருந்து பிரதமர் ஒருவர் நியமிக்கப்படமாட்டார் என அவர் கூறினார். இதேவேளை, நாட்டின் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காணும் நோக்கில் அனைத்து கட்சி இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க 11 சுயாதீனக் கட்சிகளின் அணி முன்வைத்த யோசனைக்கு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன இணக்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஆறுமுகன் தொண்டமானின் ஆவணங்களும் எம் கைவசம்

### அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, மே. 04

அமரர். ஆறுமுகன் தொண்டமான் தொடர்பான தகவல்களும் தம்மிடம் இருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

“நாட்டை நாசமாக்கிய திருட்டுக் கும்பலை ஒட்டுமொத்தமாக அம்பலப்படுத்தல்” எனும் தொனிப்பொருளின்கீழ் ‘ஊழல் எதிர்ப்பு குரல்’ எனும் அமைப்பால் நேற்று விசேட ஊடக சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முன்னாள், இன்னாள் அமைச்சர்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் ஊழல், மோசடிகள் குறித்த தகவல்களை அநுரகுமார திஸாநாயக்க அம்பலப்படுத்தினார்.

இதன்போதே கால்நடைவள அமைச்சு பதவியை அமரர் ஆறுமுகன் தொண்டமான் வகித்த போது, வாகனங்களுக்கு எரிபொருள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான தகவல்கள் இருப்பதாக குறிப்பிட்டார். (அ)

## தாய்லாந்திலிருந்து எரிவாயு இறக்குமதி

கொழும்பு, மே. 04

தாய்லாந்திலிருந்து எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டிற்கு எரிவாயுவை வழங்குவதற்கு தாய்லாந்தின் சியம் எரிவாயு நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர், பொறியியலாளர் விஜித்த ஹேரத் குறிப்பிட்டார்.

விநியோகக் கட்டணத்தில் 10 வீத குறைந்த கட்டணத்துடன் எரிவாயுவை வழங்கவும் குறித்த நிறுவனம் இணங்கியுள்ளது. எவ்வாறாயினும், சமையல் எரிவாயுவின் விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என லிட்ரோ நிறுவன தலைவர் கூறினார். (அ)



## பா.ஜ.க. தமிழ்நாட்டுத் தலைவர் திருக்கேதீஸ்வரத்துக்கு விஜயம்!

மன்னார், மே. 04

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருந்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு சென்றார்.

பா.ஜ.க. தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட குழுவினர் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டனர்.

அதனைத்தொடர்ந்து இந்திய அரசின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு வரும் திருக்கேதீஸ்வர ஆலயக் கட்டுமானப் பணிகளை பார்வையிட்ட தோடு,திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினருடனும் கலந்துரையாடினார்.

இதன் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் குழுவினர் உடனிருந்தனர். (அ)

## எரிவாயு, எரிபொருளுக்கான ஒதுக்கீட்டுக்கு இந்தியக் கடன் எல்லை வசதியில் சீராக்கம்

கொழும்பு, மே 04

இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடன் எல்லை வசதியின் கீழான பொருள் ஒதுக்கீட்டில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, முன்னதாக கைத்தொழில் மற்றும் மூலப் பொருளுக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கிடப்பட்டிருந்தது.

அது தற்போது, 260 மில்லியன் அமெரிக்க டொலராக சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், 300 மில்லியன் அமெரிக்க டொலராக ஒதுக்கிடப்பட்டிருந்த உணவுக்கான ஒதுக்கீடு 180 மில்லியன் அமெரிக்க டொலராகவும், சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

மருந்து பொருட்களுக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதில் எரிவாயுவுக்காக 160 மில்லியன் அமெரிக்க டொலரும், எரிபொருளுக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியும் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. (அ)

## அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, மே. 04

அரிசிக்கான உச்சபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் இந்த அறிவித்தல் வெளியிடப்படுள்ளது.

வெள்ளை - சிவப்பு நாடு அரிசி கிலோ ஒன்றின் விலை 220 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை - சிவப்பு சம்பா அரிசி கிலோ ஒன்றின் விலை 230 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கீரிச் சம்பா கிலோ ஒன்றின் விலை 260 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## விபுலானந்தா அழகியற் கற்கை மாணவர்கள் இன்று முதல் பாட பகிஷ்கரிப்புப் போராட்டம்

மட்டக்களப்பு, மே. 04

விரிவுரையாளரால் மாணவர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்வத்துக்கு நடவடிக்கை எடுக்க வலியுத்தி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்கள் இன்று புதன்கிழமை முதல் பாட பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளதாக அறிவித்துள்ளனர்.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர் ஒன்றியத்தினரால் பழைய மாணவர்களுக்கான அழைப்பு தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் பாட பகிஷ்கரிப்பு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்கள் இன்று முதல் கால வரையறையற்ற பாட பகிஷ்கரிப்புப் போரராட்டததில் ஈடுபட உள்ளதாக குறிப்பிட்டு குறித்த போராட்டத்துக்கு பழைய மாணவர்களை பூரண ஆதரவு வழங்குமாறு கோரும் வகையில் அந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர் உள்ளிட்ட அனைத்து மாணவர்களையும் விடுதியில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வேலணை பகுதி ஊடாக தமிழகம் செல்ல முற்பட்டதாக 4 பேர் கைது!

யாழ்ப்பாணம், மே. 04

வேலணைப் பகுதி ஊடாக தமிழகத்துக்கு செல்ல முற்பட்டதாக 4 பேர் கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வேலணை கடற்கரையில் சந்தேகத்துக்கிடமாக சிலர் உள்ளதை கடற்படையினர் அவதானித்துள்ளனர்.

கடற்படையினர் அவர்களை விசாரித்தபோது குறித்த நால்வரும் தமிழகத்துக்குச் செல்ல படகுக்காக காத்திருந்தமை தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில் நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-03)

# காலி முகத்திடல் போராட்டத்தில் தமிழ் அடிப்படைவாதிகளாம்!

## சுதந்திரக்கட்சி கண்டுபிடிப்பு



கொழும்பு, மே 04

**"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகத் தலைவரான எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் உருவச்சிலையில், அவரின் கண்கள் கறுப்பு துணியால் கட்டப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் சில தமிழ் அடிப்படைவாதிகளே செயல்பட்டுள்ளனர்."**

-இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

காலி முகத்திடல் வளாகத்திலுள்ள பண்டாரநாயக்கவின் சிலை அகற்றப்படவேண்டும் என தமிழ் காடியனில் வலியுறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே பண்டாரநாயக்கவின் கண்கள், கறுப்பு துணியால் கட்டப்பட்டுள்ளது.

காலி முகத்திடல் போராட்டத்துக்கு நாம் ஆதரவு. எனினும், அதற்குள்ளும் சில தமிழ் அடிப்படைவாதிகள் தமது நிகழ்ச்சி நிரலை திணிப்பதற்கு முற்படுகின்றனர். இது தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும். இச்சம்பவத்தை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன், அரசுக்கு எதி ரான நம்பிக்கையில்லாப் பிரே ரணை தொடர்பில் அடுத்த வாரம் முடிவெடுக்கப்படும்-என்றார். (அ)



'தொழிலாளர்களுக்கு ரூ. 3000 வேண்டும்'

# தலவாக்கலையில் இருந்து கொழும்புக்கு நடைபவனி

கொழும்பு, மே. 04

கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அரசாங்கத்திற்கு எதிரான தொடர்ச்சியான போராட்டத்திற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு தலவாக்கலை நகரில் இருந்து சசிகுமார் என்ற தனி மனிதர் ஒருவர் நடைபவனியாக தனது போராட்டத்தை ஆரம்பித்தார்.

இந்த தனிமனித நடைபவனிப் போராட்டம் காலிமுகத்திடலில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போராட்டத்தில் இணைந்து கொள்வதற்காக இன்னும் மூன்று தினங்களில் சென்று அடையும் நோக்குடன் இதனை ஆரம்பித்துள்ளார்.

நேற்றுக் காலை தலவாக்கலை நகர மத்தியில் ஆரம்பித்த இந்த போராட்டத்தில் தலவாக்கலை லிந்துலை நகர சபையின் முன்னாள் தலைவர் மற்றும் தலவாக்கலை லிந்துலை நகர சபையின் தற்போதைய உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் மத்திய குழு உறுப்பினருமான தாளமுத்து சுதாகரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

அதனைதொடர்ந்து நடைபவனியாக சென்ற அவரை கொட்டகலையில் நகர வர்த்தகர்கள் சார்பில் வர்த்தக சங்க தலைவர் புஷ்பா விஷ்வநாதன் கொட்டகலை நகரில் வரவேற்பு செய்தார். அவருடன் நகர மக்களும் உடனிருந்தனர். (அ)

# நீங்கள் தொடர்ந்து போராட்டம் செய்தால் சுற்றுலாப் பயணிகள் எப்படி வருவார்கள்?

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கேள்வி

கொழும்பு, மே 04

இலங்கையில் தொடர்ந்து போராட்டங்களை நடத்தினால் எமது நாட்டுக்கு எப்படி சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் என்று சுற்றுலா மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கேள்வி எழுப்பி உள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்து உள்ளது. நாட்டில் நிலவும் அமைதி இன்மையே இதற்குக் காரணம்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு



தீர்வு காண சுற்றுலாத்துறையை பலப்படுத்தவேண்டும். இந்த நாட்டுக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க வேண்டும்.

எமது நாடு அமைதியாகவும் பாதுகாப்பாகவும் இருந்தால் மட்டுமே சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருவார்கள்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவடையும் வரை எமது நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவாகவே இருந்தது.

போர் முடிவடைந்து நாட்டில் அமைதி நிலவிய காலகட்டத்தில் ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கோவிட் பெருந் தொற்றால் பொருளாதாரம் சரிந்து இருந்த வேளையில், எமது நாட்டுக்கு கிட்டத்தட்ட 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

கடந்த ஐந்து மாதங்களில் மீண்டு வர முடிந்தாலும் மார்ச் மாதத்தில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 100 ஐ தாண்டி உள்ளது.

நாளாந்தம் வருகை தருவோர் எண்ணிக்கை 4,000 முதல் 5,000 வரை இருந்தது. ஆனால் தற்போது அந்த எண்ணிக்கை ஆயிரமாக குறைந்து உள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண உண்மையான ஆர்வம் இருந்தால், நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழிகளைத் தடுக்கும் வகையில் போராட்டக்காரர்கள் செயற்படக்கூடாது.

எனவே, தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண ஆர்வலர்கள் யதார்த்தமாகச் சிந்தித்து ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள் கிறேன்-என்றார் அவர். (அ)



# காட்டு யானைகளினால் மேட்டுநில பயிர் அழிவு

கிளிநொச்சி, மே. 04

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் உள்ள கொழுந்துபுலவுப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 3 மூன்று காட்டு யானைகள் பயிர்களை அழித்துள்ளன.

இந்த யானைகள் அங்கு மேற்கொள்ளப்பட்டு இருந்த மூன்று ஏக்கர் பூசனிச் செய்கையை முற்று முழுதாக அழித்துள்ளன.

இதேவேளை ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரவள்ளிகளையும் அவை துவம்சம் செய்ததுடன், 500 வர்த்தக பழச் செய்கையையும், 30ற்கும் மேற்பட்ட இரண்டு வருட காலத் தென்னைகளையும் அழித்துள்ளன.

அத்துடன் மற்றுமொரு வீட்டுத்தோட்டத்திலுள்ள வாழை மரங்களையும் அழித்துள்ளதுடன், நிலக்கடலை பயிரையும் சேதப்படுத்தியுள்ளன.

கடந்த மாதமும் அயல் கிராமமான மயில்வாகனபுரம் பகுதியிலும் தென்னை மரங்களை அழித்ததாகவும் தொடர்ச்சியாக தமது பகுதியில் வந்து பயிர்களை அழித்துள்ளமையால் காட்டு யானைகளினால் மிக அச்சநிலை தோன்றியுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர். (அ)

### அனைத்து துறைமுகங்களின் செயல்பாடு வழமைபோல்

கொழும்பு,மே 04

நாடளாவிய ரீதியாக உள்ள சகல துறைமுகங்களின் செயல்பாடுகளும் தற்போது வழமை போல மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் பிரசாந்த ஜயமான்ன இதனைத் தெரிவித்தார்.

குறிப்பாக கொழும்புத் துறைமுகத்தின் தெற்காசிய நுழைவாசல் இறங்குதுறை, சர்வதேச கொள்கலன் இறங்குதுறை மற்றும் ஜெயா கொள்கலன் இறங்குதுறை என்பன வழமைபோல கையாளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, துறைமுக தொழிலாளர்கள் கடமைக்கு வரும் வகையில், துறைமுகங்களுடனான போக்குவரத்து வசதியும் தற்போது வழங்கப்படுவதாக துறைமுக அதிகார சபையின் தலைவர் பிரசாந்த ஜயமான்ன கூறினார். (அ)

# நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் திடீர் கோளாறு

## சீரமைக்க 5 நாள்களாகும்

கொழும்பு, மே 04

நுரைச்சோலையில் உள்ள 270 மெகாவாட் மின் உற்பத்தி நிலையங்களில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

"சீரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஐந்து நாள்களில் தேசிய மின் இணைப்புடன் மீண்டும் இணைக்கப்படும்.

அனல் மற்றும் நீர்நிலைகளை பயன்படுத்தி மின்வெட்டை மேலும் நீட்டிக்காமல் நிர்வகிக்கப்படும்" என்று மின்சக்தி அமைச்சர் கஞ்சனா வீரசேகர தெரிவித்தார். (அ)

# சுகாதாரத்துறையினரும் 6ஆம் திகதி போராட்டம்!

கொழும்பு, மே 04

எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 7 மணி முதல் 24 மணி நேர வேலைநிறுத்தப் போராட்டத்தில் சுகாதார பணியாளர்கள் தவிர அனைத்து சுகாதாரத் துறை ஊழியர்களும் ஈடுபடவுள்ளனர்.

அனைத்து அத்தியாவசிய மற்றும் உயிர்காக்கும் சேவைகளும் நடத்தப்படும் என்றும், பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைக்க சிறப்பு வேலைத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர்கள் கூறினர்.

எவ்வாறாயினும், அத்தியாவசியமற்ற நோக்கங்களுக்காக மருத்துவமனைகளுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு தொழிற்சங்கங்கள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளன.

தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக அன்றைய தினம் காலை 9 மணி முதல் சுகாதார அமைச்சு மற்றும் அனைத்து மருத்துவ மனைகளுக்கும் எதிரே போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# “எப்ப அகதியா பதிவு செய்வீங்க?”

# அடைக்கலம் கோரி வந்த இலங்கை தமிழர்கள் கண்ணீர்

- பிரபுராவ் ஆனந்தன்



இலங்கையில் நீடித்து வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கிருந்து படகு மூலம் தமிழ்நாட்டுக்கு இதுவரை 75 இலங்கை தமிழர்கள் வந்துள்ளனர். ஆனால், தாய்நாட்டை விட்டு வெளியேறி வந்த அவர்கள், அகதிகளாக பதிவு செய்யப்படாமல் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வழக்கமாக இதுபோல உரிய ஆவணமின்றி வெளிநாட்டில் இருந்து இந்தியாவுக்குள் வந்தால் அவர்கள் மீது கடவுச்சீட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், இலங்கையில் நிலவி வரும் அசாதாரண சூழல் காரணமாக தமிழ்நாட்டுக்கு வந்துள்ள அந்நாட்டவர்களை மனிதாபிமான அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தாமல் அகதிகள் முகாமில் கண்காணிப்பில் தங்க வைத்திருக்கிறது தமிழ்நாடு அரசு. அங்கு அந்த மக்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள்?

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவு பொருட்களின் தட்டுப்பாடு, உணவு பொருட்களின் விலையேற்றம் காரணமாக கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் இன்று வரை 75 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்து மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் வந்துள்ள இலங்கை தமிழர்களை தற்போது வரை அகதிகளாக பதியாமல் உணவு, தங்குமிடம் மட்டும் வழங்கப்பட்டது. இலங்கையில் இருந்து அகதிகளாக வந்துள்ள இலங்கை தமிழர்களை அகதிகளாக பதிய வேண்டும் என இலங்கை தமிழர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர். இந்திய அரசு முகாம்களில் தங்கியுள்ள அவர்கள் அகதிகளாக பதியவில்லை என்றால் அவர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என தெரிய வருகிறது.

**இலங்கை தமிழர்களை சந்தித்த தமிழக முதல்வர்**

கடந்த 15ஆம் தேதி தமிழக முதல்வர் ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் இலங்கை தமிழர்களிடம் பேசினார்.

4 மாத கை குழந்தையுடன் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு தமிழகம் வர என்ன காரணம் என முதல்வர் கேட்டார். அதற்கு பதில் அளித்த மேரி கிளாரா என்ற பெண் இலங்கையில் தற்போது உள்ள விலைவாசி உயர்வுக்கு எனது குழந்தையை வைத்துக் கொண்டு இலங்கையில் வாழ முடியாது, குழந்தைக்கு கொடுக்கும் பால்மா ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது. என்னால் அவ்வளவு பணம் கொடுத்து பால் மாவு வாங்கி குழந்தைக்கு கொடுக்க முடியாது என்பதால் உயிரை பணயம் வைத்து தமிழகம் வந்ததாக கூறினார்.

தமிழகத்திற்கு அகதிகளாக வந்த எங்கள் மீது வழக்கு பதிவு செய்து புழல் சிறை வரை அழைத்துச் சென்றனர். ஆனால் தமிழக அரசின் சிறப்பு உத்தரவின் பெயரில் வழக்குகளை ரத்து செய்து விட்டு சிறையில் அடைக்காமல் மனிதாபிமான அடிப்படையில் எங்களை முகாம்களில் தங்க வைத்துள்ளனர்.



இருப்பினும் எங்களை இதுவரை அகதிகளாக பதியவில்லை என மேரி கிளாரா முதல்வரிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதில் அளித்த முதல்வர் தற்போது வரை மத்திய அரசிடமிருந்து தமிழகம் வந்துள்ள இலங்கை தமிழர்களை அகதிகளாக பதிவது குறித்து எந்தவித அதிகாரப்பூர்வ தகவலும் கிடைக்கவில்லை. இருப்பினும் இது தொடர்பாக மத்திய அரசுடன், மாநில அரசு தொடர்ந்து ஆலோசனை செய்து வருகிறோம். விரைவில் நீங்கள் அனைவரும் அகதிகளாகப் பதியப்படுவீர்கள்.

அதுவரை உங்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சங்கர் லால் குமாவத்திடம் இலங்கை தமிழர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து அவர்களை மனிதாபிமான அடிப்படையில் நடத்துமாறும் அறிவுறுத்தினார்.

**அகதியாக பதியாமல் முகாமில் தங்கி என்ன பயன்?**

இது குறித்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் பேசுகையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாங்கள் கடந்த 10ஆம் திகதி தமிழகத்திற்கு அகதிகளாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கி உள்ளோம்.

இலங்கையில் நாங்கள் பட்ட கஷ்டத்தை காட்டிலும் இங்கு நிம்மதியாக இருக்கிறோம். இங்கு வந்த பிறகுதான் பிள்ளைகளை வளர்க்க முடியும் என்ற நம்பிக்கை வந்துள்ளது. எங்களை வெளியே வேலைக்கு செல்ல அனுமதிக்குமாறு அதிகாரிகளை கேட்கிறோம் ஆனால் எங்களை வெளியே செல்ல அனுமதிக்கவில்லை.



எங்களை வேலைக்கு போக அனுமதித்தால் தானே எங்கள் பிள்ளைகளை நன்றாக வளர்க்க முடியும் தொடர்ந்து பதிவு இல்லாமல் எங்களால் எத்தனை மாதம் இப்படி இருக்க முடியும்.

இலங்கையை விட இங்கு காய்கறி, அத்தியாவசியப் பொருட்களின் விலை மிகவும் குறைவாக இருக்கிறது. முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கை மக்கள் குறைந்த விலைக்கு பொருட்கள் வாங்கி சாப்பிடுவதை பார்க்கும்போது நாங்களும் வெளியே சென்று எங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி சமைத்து சாப்பிட வேண்டும் என ஆசையாக இருக்கிறது.

நாங்கள் வந்த நாள் முதல் இதுவரை வீட்டில் சமைக்கவில்லை, எங்களுக்கு மூன்று நேரமும் உணவு வழங்கப்படுகிறது. அந்த உணவை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்.

நான் இலங்கையில் இருந்து வரும்போது பத்தாயிரம் ரூபாய் இலங்கை பணம் எடுத்து வந்திருந்தேன். அந்த பணத்தை இங்கு மாற்றி இரண்டு ஆயிரம் ரூபாய் வைத்துள்ளேன். என்னிடம் உள்ள பணம் முடிய போகிறது பணம் முடிந்தபின் என்ன செய்வது என்று தெரியவில்லை.

கடந்த சில நாட்களுக்கு முன்பு தமிழக முதல்வர் எங்களுடன் காணொலிக் காட்சி மூலமாக பேசியபோது உங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தமிழக அரசு செய்யும் அதற்கான அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஆனால் எங்களை அகதியாக பதிவது குறித்து எந்தவிதமான உறுதியான தகவலும் தெரிவிக்கவில்லை.

தற்போது அகதிகள் முகாமில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகள் மழை பெய்தால் ஒழுகும் நிலையில் உள்ளது. இது குறித்து நாங்கள் அதிகாரியிடம் தெரிவிக்கையில் விரைவில் சரி செய்து தருவதாக தெரிவித்துள்ளனர். ஆனால் தொடர்ந்து பெய்த மழையால் வீடுகளுக்குள் தண்ணீர் வந்துவிட்டது.

எங்களுக்கு பாய், மின் விசிறி, தண்ணீர் குடம், உள்ளிட்ட பொருட்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இது மட்டும் எங்களுக்கு எப்படி போதுமானதாக இருக்கும். எங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த நாங்கள் வெளியே சென்று வேலை செய்தால் மட்டுமே தொடர்ந்து இங்கு வாழ முடியும். எனவே எங்களை உடனடியாக அகதிகளாக பதிவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி செய்தால் தான் நாங்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்ததற்கு அர்த்தமாக இருக்கும் என தெரிவித்தார்.

**இந்திய அரசு ஏன் எங்களை அகதிகளாக பதிவு செய்ய மறுக்கிறது?**

இது குறித்து இலங்கையில் இருந்து வந்த மற்றொரு பெண் பேசுகையில், கடும் இன்னல்களுக்கு மத்தியில் என்னுடைய நகைகளை விற்று படகிற்கு பணம் செலுத்தி தமிழகத்திற்கு என் குடும்பத்துடன் அகதியாக வந்து தனுஷ்கோடியில் இறங்கினேன்.

வரும் வழியில் கடலில் ஏற்பட்ட சூறைக்காற்று மற்றும் மழையால் கடுமையாக பாதிக்கப்பட்டு, “வாழ்ந்தால் தமிழகத்தில் வாழ்வோம் அல்லது கடலில் விழுந்து சாவோம்” என்ற ஒரே நோக்கத்துடன் வந்த எங்களை நல்ல முறையில் வரவேற்ற தமிழக அரசு உடனடியாக மண்டபம் அகதிகள் முகாமில் தங்க ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

நான் தமிழகம் வந்து 25 நாட்களுக்கு மேலாகிறது ஆனால் தற்போது வரை எங்களை அகதியாக பதியவில்லை. இது எங்களுக்கு மிகுந்த வருத்தமளிக்கிறது. பல பிரச்சனைகளுக்கு மத்தியில் இனி எங்கள் எதிர்காலம் தமிழகத்தில் தான் என தஞ்சம் புகுந்த எங்களை அகதியாக ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் நாங்கள் வேறு எங்கு செல்வது.

எங்களை போல் பலரும் இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு வர தயாராக உள்ள நிலையில் இப்படி வந்தவர்களை அகதிகளாக பதியாமல் வைத்திருந்தால் எப்படி அவர்கள் தமிழகம் வர நினைப்பார்கள்.

அகதிகள் முகாமில் உள்ள அலுவலகத்தில் கேட்கும் போது மத்திய அரசு சார்பில் தற்போது வரை உங்களை அகதிகளாக பதிவு செய்ய எந்தவிதமான அதிகாரப்பூர்வ உத்தரவு வரவில்லை. எனவே மனிதாபிமான அடிப்படையில் தான் உங்களை தற்போது இங்கு தங்க வைத்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதே நிலை நீடித்தால் எங்கள் எதிர்காலம் கேள்விக்குறியாகும். எங்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக சொல்லப்படுகிறது. அப்படி அனுப்பும் பட்சத்தில் நான் எனது நகைகளை விற்று தமிழகம் வந்ததற்கான அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

எனவே தமிழக அரசு இந்திய அரசிடம் பேசி எங்களை அகதிகளாக பதிவதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்.

**இலங்கைக்கு திரும்பி செல்ல விருப்பம் இல்லை**

இது குறித்து பேசிய மற்றொரு இலங்கை தமிழர், நாங்கள் கடந்த 15 நாட்களுக்கு முன்பு இலங்கையில் இருந்து அகதிகளாக தனுஷ்கோடி வந்தடைந்தோம்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# பாரிஸ், லண்டன், பெர்லினை ரஷ்யாவின் அணு ஏவுகணை

## 200 நொடியில் சுடுகாடாக்கும்?

**குமாரதாஸன், பாரிஸ்**

**ரஷ்யாவைப் பல வீனப்படுத்துவதற்காகப் போரை நீடிப்பதையே அமெரிக்கா விரும்புகிறது. ஸ்தம்பிதமடைந்துள்ள தனது இராணுவ இலக்கை மாற்றுவதற்காக புடின் போரை அண்டை நாடுகளுக்கு விஸ்தரிக்கக்கூடும் என்று மேற்குலகம் எதிர்பார்க்கிறது.**

ஐரோப்பாவின் முக்கிய நகரங்களாகிய பாரிஸ், லண்டன், பெர்லின் மூன்றையும் 200 நொடிகளுக்குள் தாக்கி நிர்மூலமாக்குகின்ற அணு வல்லமை ரஷ்யாவிடம் உள்ளது.

பால்டிக் கடலில் உள்ள ரஷ்யாவின் கடற்படைத் தளமான கலினின்கிராட்டில் (Kaliningrad) இருந்து ஏவக்கூடிய "சர்மாட்" அணு ஏவுகணை (Sarmat missile) பெர்லின் நகரை 106 நொடிகளிலும் பாரிஸை 200 நொடிகளிலும் லண்டனை 201 விநாடிகளிலும் இருந்த இடம் தெரியாமல் அழித்து விடவல்லது.

மொஸ்கோவில் அரசுத் தொலைக் காட்சியில் ஒளிபரப்பான நிகழ்ச்சி ஒன்றில் இவ்வாறு வரைபடங்களுடன் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. "சனல் வண்" சேவையில் அதிக எண்ணிக்கையானோரால் பார்வையிடப்படுகின்ற நிகழ்ச்சியில் அணு ஆயுதத் தாக்குதல் தொடர்பாக நடத்தப்பட்டுள்ள அந்த விவாதம் உலகெங்கும் அணு ஆயுத மோதல் தொடர்பான அச்சத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

இது ஓர் அச்சமூட்டும் பரப்புரை மட்டுமே என்று நிபுணர்கள் கூறியுள்ள போதிலும் நேட்டோ நாடுகள் தங்களது உஷார் நிலை எந்தளவு என்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டிய முக்கிய கட்டம் இது என்று அந்த அமைப்பின் முன்னாள் தலைவர் ஒருவர் எச்சரித்திருக்கிறார். அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை அள்ளி வழங்கி வருவதால் ரஷ்யா தான் தொடுத்த போரில் பெரிய வெற்றி எதனையும் எட்டமுடியாமல் தடுமாறும் நிலை ஏற்பட்டுள்ளது.




பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் தனது தேர்தல் வெற்றிக்குப் பிறகு இன்று அதிபர் ஷெலான்ஸ்கியுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். பிரான்ஸின் இராணுவ, மனிதாபிமான உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும் என்று அச்சமயம் அவர் உறுதிமொழி அளித்துள்ளார். ஜேர்மனி உக்ரைனுக்கு வலுவான போராயுதங்களை விநியோகிப்பதற்கு அந்நாட்டின் பாராளுமன்றம் முழு ஒப்புதல் அளித்திருக்கிறது.

இவ்வாறு உக்ரை னுக்குத் தொடர்ந்து ஆயுத உதவி அளிக்கப்படுவது போரைப் பல ஆண்டுகள் நீடிக்கச் செய்யும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

ரஷ்யாவைப் பலவீனப் படுத்துவதற்காகப் போரை நீடிப்பதையே அமெரிக்கா விரும்புகிறது. ஸ்தம்பிதமடைந்துள்ள தனது இராணுவ இலக்கை மாற்று வதற்காக புடின் போரை அண்டை நாடுகளுக்கு விஸ்தரிக்கக்கூடும் என்று மேற்குலகம் எதிர்பார்க்கிறது.

ரஷ்யா அதன் உலகப் போர் வெற்றி நாள் அணிவகுப்பை மே, 9ஆம் திகதிமொஸ்கோவில் நடத்தவுள்ளது. அதற்கு முன்பாக உக்ரைனில் ஒரு பெரிய சண்டை அல்லது நேட்டோவின் ஆயுத விநியோகங்கள் மீதான அதிரடி என்று ஏதேனும் ஒரு பெரிய நடவடிக்கையை புடின் முன்னெடுக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அடைக்கலம் கோரி...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னர் அங்கிருந்து பொலிஸார் அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டு தற்போது மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளனர்.

இலங்கையில் இருப்பதைக் காட்டிலும் தமிழகத்தில் இருப்பது பாதுகாப்பாகவும், சந்தோஷமாகவும் உள்ளது. நாங்கள் இலங்கையில் இருந்து கிளம்பும்போது விற்பனை செய்த உணவு பொருட்களின் விலை தற்போது இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.

இன்னும் தொடர்ந்து விலை ஏற்றம் ஏற்படுவதுடன் உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும். குறிப்பாக நாங்கள் இலங்கையில் இருக்கும் போது 250 ரூபாய்க்கு விற்ற மைதா மாவு தற்போது 350 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பால் மாவு விலை ஆயிரத்தை தாண்டியுள்ளது.

மண்டபம் அகதிகள் முகாமில் எங்களைச் சுற்றி உள்ள மக்கள் அனைவரும் எங்கள் நாட்டு மக்கள் என்பதால் நாங்கள் எங்கள் நாட்டில் வாழ்வது போல் மகிழ்ச்சியாக உள்ளது. இங்கு காய்கறி மற்றும் உணவு பொருட்கள் விலை மிகவும் குறைவாக உள்ளதால் எங்களால் எளிதில் வாங்கிக்கொள்ள முடிகிறது. இலங்கையில் ஆயிரம் ரூபாய்க்கு வாங்கும் பொருட்கள் இங்கு 100 ரூபாய்க்கு வாங்க முடிகிறது.

நாங்கள் கொண்டு வந்த பணம் முடிந்துவிட்டது. எங்களை வெளியே அனுப்பினால் தான் வேலைக்கு சென்று சம்பாதிக்க முடியும் ஆனால் எங்களை வெளியே செல்ல அனுமதிக்காமல் உள்ளேயே தங்க வைத்துள்ளனர்.

நான் கடந்த 1990ஆம் ஆண்டு போரின் காரணமாக இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு அகதியாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்த போது மறுநாளே அகதியாக பதிவு செய்து அரசால் மாதம் 10 ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டது.

ஆனால், இன்று வரை எங்களை அகதிகளாக பதிவு செய்யாமல் முகாமில் அடைத்து வைத்துள்ளனர் என்ன நடக்கிறது என்று ஒன்றும் புரியாமல் குழப்பமான மன நிலையில் தான் இங்கு தங்கி இருக்கிறோம் எங்களுக்கு மட்டுமல்ல எனக்கு முன்னால் வந்தவர்களும் இன்னும் அகதிகளாக பதியாமல் காத்திருக்கிறார்கள்.

நாங்களும் ஒவ்வொரு முறையும் அகதிகள் மறுவாழ்வு அதிகாரிகளிடம் கேட்கும்போது மேலிடத்தில் இருந்து எங்களுக்கு உத்தரவு வரும் வரை உங்களை அகதிகளாக பதிவு செய்ய முடியாது அதுவரை கொடுக் கும் உணவை சாப்பிட்டுவிட்டு தங்குமாறு சொல்கி றார்கள்.

எங்களை வேலைக்கு செல்ல அனுமதித்தால் தான் எங்கள் பிள்ளைகள் ஆசைப்பட்டதை வாங்கி கொடுக் கலாம் என்றார்.



### இலங்கை தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப திட்டமா?

இது குறித்து ஒப்பர் தொண்டு நிறுவனத்தில் உள்ள ஒருவர் பிபிசி தமிழிடம் பேசுகையில், முன்பெல்லாம் அகதிகளாக வரும் இலங்கை தமிழர்களை உடனடியாக அகதிகளாக பதிவு செய்து மண்டபம் அகதிகள் முகாம் அல்லது தமிழகத்தில் உள்ள ஏதாவது ஒரு அகதிகள் முகாமுக்கு மாற்றப்பட்டு அங்கு அவர்களுக்கு வீடு வழங்கப்படும்.

உயிர் பயம் காரணமாக இனி இந்த நாட்டில் உயிர் வாழ முடியாது என்று ஒரு நாட்டை விட்டு வருபவர்கள் மட்டும் அகதிகளாக பதிவு செய்ய முடியும். ஆனால் தற்போது இலங்கையில் இருந்து வருபவர்கள் பசி, பட்டினி என்று வருவதால் அவர்களை அகதிகளாக பதிவு செய்யாமல் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைப்பது தான் வழக்கம். தமிழக அரசின் சிறப்பு உத்தரவின் பெயரில் சமீபத்தில் இலங்கையில் இருந்து வந்துள்ள 75 பேரும் அகதிகளாக பதியாமல் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளனர்.

இவர்களுக்கு பதிவு கொடுக்க வாய்ப்பு இல்லை என எங்களுக்கு தெரிய வருகிறது. அகதிகளாக பதிவு செய்தால் மட்டுமே இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்பாமல் அவர்களுக்கு ஆதார் அட்டை உள்ளிட்ட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு முகாமில் தங்க வைக்கப்படும் ஆனால் தற்போது வந்தவர்களுக்கு உணவு கொடுத்து விருந்தினர்களாக மட்டுமே தங்க வைத்துள்ளனர்.


இந்த 75 பேரையும் வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. அவர்களை பொருத்தளவு இது சிறையில் இருப்பது போல் தான் ஆனால் முகாம்களுக்குள் சுதந்திரமாக சுற்றித் திரியலாம்.

இதுநாள் வரை தமிழகத்திற்கு அகதிகளாக வந்து ஒரு மாதத்திற்கு மேல் அகதிகளாக பதியாமல் யாரையும் தங்க வைத்ததில்லை. இதுவே முதல் முறை எங்களை பொறுத்தவரை இதே நிலை நீடித்தால் அவர்களை மீண்டும் நாட்டிற்கு திருப்பி அனுப்ப கூடிய நிலை தான் ஏற்படும்.

ஒருவேளை தற்போது வந்துள்ள இலங்கைத் தமிழர்கள் விரும்பினால் காவல் நிலையங்களில் பதிவு செய்து வெளியில் தங்கலாம். ஆனால் அவர்கள் அகதிகளாக பதிவு பெறாமல் எத்தனை நாட்கள் தமிழகத்தில் தங்கி இருந்தாலும் எந்த பயனும் இல்லை என்கிறார் ஒப்பர் தொண்டு நிறுவனத்தின் உறுப்பினர்.


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........      ii) 18 , 15 , 12 , ............. , ...........

21)

| | | |
|---|---|---|
| 3, | 9, | 14, |
| | 6, | |
| 10, | | 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..............................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.............................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

....................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் $3l\ 300ml$ பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

....................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ...................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)   2)   3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி  2) இரணைமடுக்குளம்  3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்  2) உதிப்பு  3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்  2) வாளேந்திய சிங்கம்  3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976  2) 1851  3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு  2) இறப்பர், தாழம்பூ  3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6  2) 8  **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130  2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745  **23.** 455
**24.** 1l 100ml / 1100ml  **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190  2) 100  3) 290
**27.** 15 : 30  **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1  **31.** 2  **32.** 3
**33.** 2  **34.** 3  **35.** 2

### கல்வி tv CHANNEL-1 — 04.05.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 04.05.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 3 வருடங்களுக்கு பின்னர் சிறப்பாக நடந்த நோன்புப் பெருநாள் தொழுகை

அம்பாறை, மே 04

புனித நோன்புப் பெருநாள் தொழுகை அக்பர் ஜும்மா மஸ்ஜித் ஏற்பாட்டில் 3 வருடங்களுக்கு பின்னர் அம்பாறை மாவட்டம் மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் நேற்றுக் காலை 6.15 மணிக்கு நடைபெற்றது.

இதில் ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் நற்பிட்டிமுனை, கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, பொத்துவில் உள்ளிட்ட முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் பெருநாள் தொழுகைகள் பரவலாக இடம்பெற்றன.

3 வருடங்களுக்கு பின்னர் மேற்படி பகுதிகளில் இடம்பெற்ற பெருநாள் தொழுகைகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் கொரோனா அச்சுறுத்தல் உட்பட இதர காரணங்களினால் பெருநாள் தொழுகை கட்டுப்பாடுகளுடன் நாடு பூராகவும் இடம்பெற்றிருந்தன.

நேற்று நாடளாவிய ரீதியில் இஸ்லாமியர்கள் தமது புனித நோன்புப் பெருநாள் பண்டிகையை 3 வருடங்களின் பின்னர் சிறப்பாக அனுஷ்டித்தனர் .

பெருநாள் தொழுகையினை நிறைவேற்றிய பின் அனைவரும் தமது நோன்பு பெருநாள் வாழ்த்துக்களை தமது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொண்டனர் .

இதனை தொடர்ந்து தமது பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளும் முகமாக உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்களின் வீடுகளுக்குச் சென்று பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதோடு உணவுப் பண்டங்களை பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது . (அ)



# ஏழு வருடங்களுக்குப் பின்னர் நிம்மதியான நோன்பு பெருநாள்

## அக்கரைப்பற்று பள்ளிவாசல்களின் தலைவர் எஸ்.எம் சபீஸ்

அக்கரைப்பற்று, மே 04

பள்ளிவாசல் சூழலோடு பழகாத வாலிபர்கள், சிறுவர்கள் மற்றும் எவரும் சமூகத்தில் சிறந்த பிரஜையாக முடியாதென அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசல் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்களின் தலைவருமான எஸ்.எம் சபீஸ் தெரிவித்தார்.

பள்ளிவாசலில் நேற்று நோன்பு பெருநாள் சம்பிரதாய உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது: ரமழானில் நோன்பு நோற்று, நல்லமல்கள் புரிந்த ஜமாஅத்தினர் அனைவருக்கும் “ஈத்முபாரக்” வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். புனித ரமழானில் இந்தப்பள்ளிவாசல்களில் பணிபுரிந்த இறை சேவகர்களை “அழ்ழாஹ்” பொருந்திக்கொள்வானாக. சுமார் ஏழு வருடங்களின் பின்னர் நிம்மதியாக நமக்கு நோன்பு நோற்கவும், நல்லமல்கள் செய்யவும் வாய்ப்பு கிடைத்தது.

கிறிஸ் மனிதனிலிருந்து ஆரம்பமான கெடுபிடிகள், பின் னர் ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொரோனா கொடூரங்கள் என நீடித்தன. இம்முறை எந்தக் கெடுதல்களுமின்றி நோன்பு நோற்றோம். உச்சக்கட்ட பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அல்லாஹ் நிம்மதியைத் தந்தான். சிறுவர்கள், வாலிபர்கள் இங்கு நடக்கும் பயான்களை காது கொடுத்து கேட்க வில்லை என்றால், அவர்களது கண்கள் இங்கு வணக்கத்தில் ஈடுபடுபவர்களை பார்க்க வில்லை என்றால் அவர்களது நாவுகள் இங்கு நடக்கும் திக்ரு களை உச்சரிக்காமல் எவ்வாறு ஒரு நல்ல சமூகத்தை உருவாக் கிட முடியும் ?

அதனால் எமது தாய்மார்களும் சகோதரிகளும் அவர்களது பிள்ளைகள் மற்றும் கணவன்மார்களை பள்ளிவாசல் சூழலோடு பழக்கி, நல்லமல்கள் செய்யத் தூண்டியிருந்தனர். இதனால் இந்த ரமழானில் எமது பள்ளிவாசல் சிறுவர்களினாலும் வாலிபர்களினாலும் இறைவிசுவாசிகளினாலும் நிரம்பியிருந்தது. அதற்காக அவர்களுக்கு இவ்விடத்தில் நாங்கள் நன்றி கூறுகின்றோம். பள்ளிவாசல் சூழலோடு நெருக்கமில்லாத எவரும் சமூகத்தில் நற்பிரஜைகளாக உருவாக்கிட முடியாது. இந்தப் பள்ளிவாசல் வெளிப்புற வேலை கள் ரமழானுக்காக நிறுத் தப்பட் டிருந்தன. இறை தியானத்தி லுள்ளோரின் கவனங்கள், திசை திரும்பக் கூடாது என்பதற்கா கவே இவற்றை நிறுத்தி னோம். இனிமேல் இந்தப்பணிகள் தொடரும் -என்றார். (அ)

# இரத்த தான நிகழ்வு

மட்டக்களப்பு, மே 04

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரங்குடா காமாட்சி வித்தியாலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை இரத்தான நிகழ்வு நடைபெறவுள்ளது.

காஞ்சிரங்குடா கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட இளைஞர்கள் ஒன்றிணைந்து இந்த இரத்ததான நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இவர்கள் குருதியை கொடையாக வழங்கவுள்ளனர்.

இதன்போது, குருதிக் கொடை வழங்கவிரும்பும் அனைவரும் அன்றைய தினம் பங்கெடுத்து வழங்க முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ)



# சவளக்கடையில் நோன்பு பெருநாள்

அம்பாறை, மே 04

சவளக்கடை 6 ஆம் கிராமம் பிலால் ஜும்ஆ பள்ளிவாசல் ஏற்பாடு செய்த புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் அல்-தாஜூன் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

தொழுகையையும், குத்பா பிரசங்கத்தையும் பிலால் ஜும்ஆ பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.ஆர்.எம்.நபீல் நிகழ்த்தினார்.

இப்பெருநாள் தொழுகையில் பெருந்திரளான ஆண், பெண் இருபாலரும் கலந்துகொண்டனர். (அ)

# சாய்ந்தமருதில் நேற்று அதிகாலை அமைதியான நோன்பு பெருநாள்

மட்டக்களப்பு, மே. 04

தியாகத்தை போதிக்கும் புனித நோன்புப்பெருநாளை நாட்டின் பொருளாதார சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் இம்முறை இலங்கை முஸ்லிம்கள் சுகாதார வழிமுறைகளைப் பேணி அமைதியான முறையில் நாடு தழுவிய ரீதியில் கொண்டாடினார்கள்.

மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் ஜும்மா பள்ளிவாசல் பேஸ் இமாம் ஏ. சி.எம். இஹ்ஸான் நிகழ்த்தினார்.

சாய்ந்தமருது அல்- அக்ஸா பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது எம். எச்.எம். அஸ்ரப் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அப்துல் ஜப்பார் நிகழ்த்தினார்.

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்மாப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது அப்பிள் தோட்ட திடலில் இடம்பெற்றது. பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி ஆசிரியர் மௌலவி ஏ. ஹலீலுர் ரஹ்மான் நிகழ்த்தினார்.

பல்வேறு காரணங்களினால் கடந்த இரு வருடங்களாக தடைப்பட்டிருந்த பொது வெளிகளிலான பெருநாள் தொழுகை தடைகள் நீங்கி நேற்று முஸ்லிம்கள் சுதந்திர மாகவும், மகிழ்ச்சியாகவும் தொழுகையில் ஈடுபட்டிருந்த துடன், தொழுகை முடிந்தவு டன் தமது அன்பை ஒருவருக் கொருவர் பரிமாறிக் கொண்டனர். (அ)







# நோன்புப் பெருநாளை முன்னிட்டு உலர் உணவுப்பொதிகள் வழங்கல்

அம்பாறை, மே 04

அம்பாறை மாவட்டத்தின் பல பாகங்களுக்கும் கல்முனை கிளுகிளுப்பு சங்கத்தின் மூலம் பல மனித நேயப்பணிகள் இடம்பெற்றன.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு “எல்லோரும் கரமிணைந்து நாமிணைந்த பெருநாள் தினம் ” எனும் வேலைத்திட்டத்துக்கு அமைவாக கல்முனை பிராந்தியத்தில் அடையாளப்படுத்தப்பட்ட விசேட தேவையுடையவர்கள், பெண்கள் தலைமைத்துவக் குடும்பங்கள், வருமானம் குறைந்தவர்களுக்கான உலர் உணவுப்பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதம செயற்பாட்டாளர் ஏ.எல்.ஆஸீர், இந்த நிவாரண பணிகளுக்கு உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் சங்கத்தின் சார்பாக பிரார்த்தனையுடன் கூடிய நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார். (அ)

# "ரஷ்யா - உக்ரைன் போரில் யாருக்கும் வெற்றியில்லை"

## ஜெர்மனியில் கூறினார் இந்தியப் பிரதமர்

பெர்லின், மே 04

"உக்ரைன் - ரஷ்யா இடையே யான போரில் எந்தத் தரப்புக்கும் வெற்றியில்லை. அனைவரும் பாதிப் பையே சந்திக்க நேரிடும். அதனால் தான் அமைதியின் பக்கத்தில் இந்தியா நிற்கிறது" என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரி வித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர், இரண்டு மாதங்களுக்கு மேலாக தொடர்கிறது. இதில் உக்ரைனுக்கு அனைத்து ஐரோப் பிய நாடுகளும் ஆதரவு தெரிவித் துள்ளன. ஐ.நா.,வில் தாக்கல் செய்யப்பட்ட பல தீர்மானங் களின்போது, வாக்கெடுப்பில் பங் கேற்காமல் இந்தியா ஒதுங்கியி ருந்தது. இந்நிலையில், ஜெர்மனி, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி, மூன்று நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

முதல் நாளான நேற்று முன் தினம், ஜெர்மனிக்கு சென்ற அவ ருக்கு, விமான நிலையத்தில் சிறப் பான வரவேற்பு அளிக் கப்பட்டது.இதைத் தொடர்ந்து, ஜெர்மனி பிரதமர் ஓலப் ஸ்கால்சை அவர் சந்தித்தார். அங்கு மோடிக்கு ராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இருவரும் தனி யாக சந்தித்துப் பேசினர். இந்த சந்திப்புகளுக்குப் பின், இரு தலை



வர்களும் கூட்டாக பேட்டியளித் தனர்.

அப்போது, மோடி கூறிய தாவது: "இந்தியா, ஜெர்மனி இடை யேயான உறவை மேலும் வலுப் படுத்தும் வகையில், இந்த பயணம் அமைந்துள்ளது. உக்ரைன் - ரஷ்யா இடையேயான போரில் யாருக்கும் வெற்றி கிடைக்கப் போவதில்லை. இந்தப் பிரச்னையால், அனைவரும் கடுமையான பாதிப்புகளையே சந்திக்க நேரிடும். அதனால்தான், அமைதியின் பக்கம் இந்தியா நிற்கிறது.போர் துவங்குவதற்கு முன்பாகவே, பேச்சு வாயிலாக தீர்வு காண தொடர்ந்து வலியுறுத்தி னோம்.

"உக்ரைனில் ஏற்பட்டுள்ள மனித உரிமை மீறல்களுக்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறோம். இந்தப் போரால், கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. உணவுப் பொருட்கள், உரங்கள் என, அனைத்துக்கும் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. இது உலகின் ஒவ் வொரு குடும்பத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வளர்ந்து வரும் மற்றும் ஏழை நாடுகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன." இவ்வாறு அவர் கூறினார்.



# சி.ஐ.ஏ. அதிகாரியானார் இந்திய வம்சாவளி!

வாஷிங்டன், மே 04

அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ.வின் தலைமை தொழில்நுட்ப அதிகாரியாக இந்திய வம்சா வளியை சேர்ந்த நந்த் முல்சந்தானி நியமிக்கப்பட் டுள்ளார்.

அமெரிக்காவின் தகவல் தொழில்நுட்ப நகரமான சிலிகான் பள்ளத்தாக்கில் 25 ஆண்டுகள் பணியாற்றிய வர் நந்த் முல்சந்தானி. இவர், அமெரிக்க ராணுவத்தின் தகவல் தொழில்நுட்ப துறையிலும் பணியாற்றி உள்ளார்.

டில்லியில், 1979 - 87 வரை பள்ளியில் படித்த நந்த் முல்சந்தானி, பின்னர் அமெரிக்கா சென்றார். அங்கு, கம்ப்யூட்டர் விஞ்ஞானம், கணிதம் உள்ளிட்ட பிரிவு களில் பட்டப்படிப்பு முடித்தார்.

ஹார்வார்ட் பல்கலையில் உயர் கல்வி பயின்றார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நந்த் முல்சந்தானி, அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ.,வின் தலைமை தொழில்நுட்ப அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதை, சி.ஐ.ஏ., இயக்குனர் வில்லியம் ஜே.பர்ன்ஸ் நேற்று முன்தினம் உறுதி செய்தார்.

# புற்றுநோய் சிகிச்சைக்காக பதவியிலிருந்து தற்காலிகமாக விலகுகிறாரா புடின்?

மொஸ்கோ, மே 04

**ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், புற்றுநோய் சிகிச்சை எடுத்துக் கொள்வதற்காக அதிபர் பதவியிலிருந்து தற்கா லிகமாக விலகி, நாட்டின் பாதுகாப்பு கவுன்சில் செயலா ளர் நிகோலா பட்ரு ஷேவிடம் பொறுப்பை ஒப்படைக்கவிருப்ப தாக உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.**



புற்றுநோய்க்கு உடனடியாக அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்று புடினுக்கு மருத்து வர்கள் அறிவுறுத்தியிருப்ப தாக, ரஷ்யாவின் முன்னாள் வெளியுறவு புலனாய்வு சேவை யின் தலைவர் தனது டெலி கிராம் பக்கத்தில் தெரிவித்திருப்பதாக மேற் கோள் காட்டி நியுயார்க் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த அறுவை சிகிச்சை யைத் தொடர்ந்து குணமடை யும் காலத் தில் புடினுக்கு தற்காலிகமாக உடல் செயலிழப்பு ஏற்படக்கூடும் என்றும் அந்த செய்தியில் கூறப் பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## அமெரிக்காவில் கருக்கலைப்பு சட்டவிரோதம்:

# வெளிவரவுள்ள தீர்ப்பு கசிந்ததால் அமெரிக்காவில் போராட்டங்கள்!

வாஷிங்டன், மே 04

அமெரிக்காவில் கருக்கலைப்பு செய்வதற்கான அனு மதியை ரத்துச் செய்ய அமெரிக்க உச்சநீதிமன் றம் தீர்மானித்திருப்பதாக நீதிமன்றத்திலிருந்து கசிந்த தகவல் களைத் தொடந்து கருக்கலைப்புக்கு ஆதரவா னவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்க உச்சநீதிமன்றில் விரைவில் வெளியிடப் படவுள்ள தீர்ப்பு ஒன்று கசிந்ததைத் தொடந்து இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

தற்போது இருக்கும், கருக்கலைப்பு செய்வதற்கான நாடு தழுவிய சட்டப்பூர்வ உரிமையை அமெரிக்க உச்ச நீதிமன்றம் ரத்து செய்ய விருக்கின்றது.

இது தொடர்பாக விசாரணை நடாத்திய அமெ ரிக்க உச்சநீதிமன்ற நீதியரசர் சாமுவேல் அலிட்டோ, அமெரிக்கா முழுவதும் கருக்கலைப்பைச் சட்ட பூர்வ மாக்கிய 1973ம் ஆண்டின் நீதிமன்ற தீர்ப்பு ஒன்றை மிகவும் தவறான முடிவு என்று தனது 98 பக்க தீர்ப்பில்




சுட்டிக்காட்டியிருப்பதாக கூறப்படுகின்றது.

அமெரிக்க உயர் நீதிமன்றம் இந்த தீர்ப்பை ரத்து செய்தால், உடனடியாக 22 அமெரிக்க மாநிலங்களில் கருக்கலைப்பு சட்டவிரோதமாக்கிவிடும்.

## உணவு, இரசாயனம் உட்பட பல பொருட்களை

# இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்கிறது ரஷ்யா

புதுடில்லி, மே 04



ரஷ்யா-உக்ரைன் போர் காரணமாக ரஷ்யா மீது உலக நாடுகள்பொருளாதார தடை விதித்துள்ள நிலை யில் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு புதிய வாய்ப்பு உருவாகியுள்ளது.

ரஷ்யாவுக்கு உணவுப்பொருள்கள், செராமிக் மற்றும் இரசாயனப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. இம்மாத இறுதியில் இந்திய ஏற்றுமதியாளர்கள் குழு ரஷ்யா செல்ல உள்ளது.

ரஷ்யா மீது அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன் மற்றும் இதர நாடுகள் பொருளாதார தடை விதித்துள்ள நிலையில் இந்தியாவுக்கு கச்சா எண் ணெய்யை ரஷ்யா சலுகை விலையில் அளித்து வரு கிறது.

இந்நிலையில் இந்தியாவிலிருந்து உணவு உள்ளிட்ட பொருள்களை இறக்குமதி செய்ய ரஷ்யா ஆர்வம் காட்டியுள்ளது. ரஷ்யாவில் அதிக வாய்ப்பு உள்ளது. அதை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள இந்திய நிறுவனங்கள் தயாராக உள்ளதாக உணவு மற்றும் குளிர்பானங்களை ஏற்றுமதி செய்யும் குழுவின் உறுப்பினரான விவேக் அகர்வால் தெரிவித்துள்ளார்.

உணவு, தேயிலை மற்றும் சில பொருள்கள் விநியோகம் செய்வதுதொடர்பாக ரஷ்ய வர்த்தகர்களி டமிருந்து சில கோரிக்கைகள் வந்துள்ளதாக இந்திய ஏற்றுமதியாளர் சம்மேளனத்தின் அதிகாரிகள் தெரிவித் தனர்.

இதேபோல மருந்து, சமையல் எண்ணெய் உள்ளிட்டவற்றுக்கான தேவையும் அதிகரித்துள்ளது. இதில் உணவுப் பொருள், சமையல்எண்ணெய் மீது தடை இல்லாத காரணத்தால் இவற்றை இந்தியாவி லிருந்து இறக்குமதி செய்ய ரஷ்யா தீவிரம் காட்டு கிறது.

# பரபரப்பான போட்டியில் வென்றது கொல்கத்தா!




மும்பை, மே 04

மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய போட்டியில் ராஜஸ்தான் அணியை 7 விக்கெட்களால் வீழ்த்தியது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி.

மும்பையில் திங்கட்கிழமை இரவு ஐ. பி. எல்லின் 47ஆவது லீக் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதின.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணி நிர்ணயித்திருந்த 153 ஓட்டங்கள் என்ற சுமாரான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைற் ரைடர்ஸ் 19.1 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

பவர் ப்ளேயில் 2 விக்கெட்களை இழந்து ராஜஸ்தான் றோயல்ஸிடம் சவாலை எதிர்கொண்ட கொல்கத்தா நைற் ரைடர்ஸ், 10 ஓவர்கள் நிறைவில் மேலதிக விக்கெட் இழப்பின்றி 59 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

அணித் தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர் (34), நித்திஷ் ராணா ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 43 பந்துகளில் 60 ஓட்டங்களைப் பகிர்ந்து ஓட்ட வேகத்தை அதிகரிக்க முயன்றனர்.

ஷ்ரேயாஸ் ஐயர் ஆட்டமிழந்ததும் நித்திஷ் ராணா, ரிங்கு சிங் ஆகிய இருவரும் நிதானம் கலந்த வேகத்துடன் ஓட்டங்களைப் பெற்ற வண்ணம் இருந்தனர். அவர்கள் இருவரும் சேர்ந்து 17 ஓவர்கள் நிறைவில் அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கையை 122ஆக உயர்த்தினர்.

கடைசி 3 ஓவர்களில் கொல்கத்தா நைற் ரைடர்ஸின் வெற்றிக்கு மேலும் 31 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அடுத்த 2 ஓவர்களில் 4 அகலப் பந்துகள் உட்பட 30 ஓட்டங்களைப் பெற்ற கொல்கத்தா நைற் ரைடர்ஸ் எதிரணியின் எண்ணிக்கையை சமப்படுத்தியது. கடைசி ஓவரின் முதல் பந்தில் நித்திஷ் ராணா, சிக்ஸர் ஒன்றை விளாசி கொல்கத்தா நைற் ரைடர்ஸின் வெற்றியை உறுதி செய்தனர். நித்திஷ் ராணா 37 பந்துகளில் 48 ஓட்டங்களுடனும் ரிங்கு சிங் 23 பந்துகளில் 42 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

முன்னதாக, முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ராஜஸ்தான் றோயல்ஸ் சிரமத்திற்கு மத்தியில் 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீரர் தேவ்தத் படிக்கல் 3ஆவது ஓவரில் 2 ஓட்டங்களுடன் வெளியேற ராஜஸ்தான் றோயல்ஸின் மொத்த எண்ணிக்கை 7 ஓட்டங்களாக இருந்தது. அணியின் நம்பிக்கை நட்சத்திரமும் இந்த வருட ஐ. பி. எல்லில் 3 சதங்கள் குவித்தவருமான ஜொஸ் பட்லர் 22 ஓட்டங்களுடன் வெளியேறியபோது ராஜஸ்தான் றோயல்ஸ் 52 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அணித் தலைவர் சஞ்சு சாம்சன், கருண் நாயர் ஆகிய இருவரும் அணியைக் மீட்டெடுக்கக் கடுமையாக முயற்சித்தனர். இதன் பலனாக, 13 ஓவர்கள் நிறைவில் அணியின் மொத்த எண்ணிக்கை 90 ஓட்டங்களாக இருந்தது.

ஆனால், 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கருண் நாயர் (13), ரியான் பரக் (15), சஞ்சு செம்சன் (54) ஆகிய மூவரும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து ஷிம்ரன் ஹெட்மேயர் (27 ஆ.இ.), ரவிச்சந்திரன் அஷ்வின் (6 ஆ.இ.) ஆகிய இருவரும் மொத்த எண்ணிக்கை 150 ஓட்டங்களைக் கடக்க உதவினர். பந்துவீச்சில் ரிம் சௌதி 46 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

# வளர்ந்துவரும் வீரர்கள் இங்கிலாந்து பயணம்!



கொழும்பு, மே 04

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வுள்ள 18 பேர்கொண்ட வளர்ந்து வரும் கிரிக்கெட் குழாம் கடந்த முதலாம் திகதி பயணமாகினர்.

சிறீ லங்கா கிரிக்கெட் சபையால் நடத்தப்பட்டிருந்த கழக மட்ட வளர்ந்து வரும் அணிகளுக்கு இடையிலான தொடரில் சிறந்த ஆற்றல்களை வெளிக்காட்டிய வீரர்கள் பலருக்கும் இங்கிலாந்து பயணமான இலங்கை அணியில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இதில் துனித் வெல்லாலகே, யசிரு றொட்ரிகோ ஆகிய பாடசாலை மாணவர்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இங்கிலாந்தில் விளையாடவுள்ள இலங்கை வளர்ந்து அணிக்கு இரண்டு அணித்தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 4 நாள்கள் கொண்ட இலங்கை வளர்ந்து வரும் அணிக்கு நிபுண் தனஞ்சயவும், இருபதுக்கு 20 அணிக்கு தனஞ்சய லக்சானும் அணித்தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அணி விவரம்

நிபுண் தனஞ்சய (4 நாட்கள் அணித் தலைவர்), தனஞ்சய லக்சான் (இருபதுக்கு 20 அணித் தலைவர்), லசித் குருஸ்புள்ளே, அவிஷ்க பெரேரா, சந்தோஷ் குணதிலக, அவிஷ்க தரிந்து, நுவனிந்து பெர்னாண்டோ, நிஷான் மதுஷ்க, அஷேன் பண்டார, துனித் வெல்லாலகே, திலும் சுதீர, அஷெய்ன் டேனியல், நிபுன் மாலிங்க, நிபுன் ரன்சிக்க, மானெல்கர் டி சில்வா, யசிரு றொட்ரிகோ, உதித் மதுஷான், அம்ஷி டி சில்வா

# ரஷ்ய, பெலாரஸ் வீரர்களுக்கு தடை; ரபேல் நடால், ஜோகோவிச் கண்டனம்!

நடப்பு ஆண்டுக்கான விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாட்டு வீரர்கள் விளையாட தடை விதிக்கப்பட்டமைக்கு முன்னணி வீரர்களான ரபேல் நடால், ஜோகோவிச் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கிராண்ட்ஸ்லம் தொடர்களில் ஒன்று விம்பிள்டன் வரும் ஜூன் 27 முதல் ஜூலை 10 வரை நடைபெறவுள்ளது. இந்நிலையில், உக்ரைன்மீதான போருக்காக ரஷ்யா, அந்த நாட்டுக்கு துணையாக நிற்கும் பெலாரஸ் நாட்டின் வீரர்கள் விம்பிள்டனில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரென்னிஸ் உலகின் முன்னணி வீரர்களான நடால், ஜோகோவிச் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். "இது அநியாயம். போருக்கும் அவர்களுக்கும் தொடர்பு இல்லை. அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கையை நாம் பின்பற்ற வேண்டும்" என்று நடால் கூறியுள்ளார்.

"இது போன்றதொரு சிக்கலை நானும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் எதிர்கொண்டேன். எனக்கு நடந்ததும், இப்போது நடப்பதும் வேறு வேறு காரணங்களை கொண்டது. நம்மால் விளையாட முடியாது என்பது வீரர்களுக்கு விரக்தி அளிக்கும் விஷயம்" என்று ஜோகோவிச் தெரிவித்தார். (ஐ)

## லா லிகா உதைபந்தாட்டம்

# 35 ஆவது தடவையாக ரியல் மட்றிட் சம்பியன்!




சந்தியாகோ, மே 04

எஸ்பானியோல் கழகத்துக்கு எதிரான போட்டியில் 4 - 0 என்ற கோல் கணக்கில் வென்று லா லிகா சம்பியன் பட்டத்தை ரியல் மட்றிட் கழகம் 35ஆவது தடவையாக வென்றது.

லா லிகா உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்னும் 4 கட்டப் போட்டிகள் மீதம் இருக்கின்றபோதிலும் எஸ்பானியோல் கழகத்தை வெற்றிகொண்டதன் மூலம் அதிகப்பட்ச 81 புள்ளிகளைப் பெற்று ரியல் மட்றிட் கழகம் சம்பியன் பட்டத்தை உறுதிசெய்தது.

அணிகள் நிலையில் பார்ஸிலோனா கழகம் 34 போட்டிகளில் 66 புள்ளிகளுடன் 66 (ரியல் மட்றிட்டைவிட 15 புள்ளிகள் வித்தியாசம்) 2ஆம் இடத்திலும் செவில் கழகம் 64 புள்ளிகளுடன் 3ஆம் இடத்திலும் இருக்கின்றன.

இந்த சம்பியன் பட்டத்தின் மூலம், ரியல் மட்றிட் கழக பயிற்றுநரான கார்லோ அன்சிலோட்டி, ஐரோப்பாவில் 5 பிரதான லீக் போட்டிகளில் சம்பியன் பட்டத்தை சூட்டிக்கொண்ட முதலாவது பயிற்றுநர் என்ற சாதனைக்கு சொந்தக்காரரானார்.

இங்கிலாந்து, ஸ்பெய்ன், ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பிரதான உதைபந்தாட்ட போட்டிகளில் சம்பயினாகிய அணிகளுக்கு கார்லோ அன்சிலோட்டி பயிற்றுநராக இருந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற லீக் போட்டியின் முதலாவது பகுதியில் றொட்றிகோ (33 நி., 43 நி.) 2 கோல்களைப் போட்டு ரியல் மட்றிட்டை முன்னிலை பெற வைத்தார்.

இடைவேளையின் பின்னர் மார்க்கோ அசென்சோ (55 நி.), கரிம் பென்ஸிமா (81 நி.) ஆகியோர் கோல்களைப் போட்டு ரியல் மட்றிட் கழகத்தை வெற்றிபெறச் செய்தனர்.

ரியல் மட்றிட் கழகத்தில் 24ஆவது சம்பியன் பட்டத்தை 33 வயதான மார்சிலோ வென்றெடுத்துள்ளார்.

126 வருட ரியல் மட்றிட் கழக வரலாற்றில் அதிகத் தடவைகள் சம்பியன் பட்டத்தை சூடிய தனி ஒரு வீரர் என்ற சாதனையை மார்சிலோ தனதாக்கிக்கொண்டார். இவர் கடந்த 16 வருடங்களாக ரியல் மட்றிட் கழகத்துக்காக விளையாடி வந்ததுடன் இந்த வருடத்துடன் ஓய்வு பெறுவார் என கருதப்படுகிறது.

இதற்கு முன்னர் பிரான்சிஸ்கோ "பெக்கோ" ஜென்டோ என்பவர் 23 தடவைகள் ரியல் மட்றிட் கழகத்தில் சம்பியன் பட்டங்களை சூடியிருந்தார்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஸ்பானிய சுப்பர் கிண்ண இறுதிப் போட்டியில் அத்லெட்டிகோ கழகத்தை 2 - 0 என்ற கோல்கள் கணக்கில் ரியல் மட்றிட் கழகம் வெற்றிபெற்று சம்பியனானபோது ஜென்டோவின் சாதனையை மார்சிலோ சமப்படுத்தியிருந்தார். அதற்கு 2 தினங்களுக்குப் பின்னர் (2022 ஜனவரி 18ஆம் திகதி) ஜென்டோ காலமானார்.

# முன்னாள் அமைச்சர்களுக்கு அரசால் தொடர்ந்தும் எம்.எஸ்.டி. பாதுகாப்பு

கொழும்பு, மே 04

முன்னாள் அமைச்சர்களுக்கு அமைச்சர்களுக்கான பாதுகாப்பைத் தொடர்ந்தும் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு தரப்பினராலும் தற்போது அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னாள் அமைச்சர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்படுவதாகவும் அதனைக் கருத்திற் கொண்டு முன்னாள் அமைச்சர்களுக்கு தொடர்ந்தும் அமைச்சர்களுக்கான பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது முன்னாள் அமைச்சர்களின் வீடுகளை தாக்குவதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சித்தால் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக மோதல் தடுப்பு பொலிஸ் குழுக்களை தயார் நிலையில் வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் தேவைப்பட்டால் இராணுவத்தினரின் உதவிகளையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# சுமந்திரனுக்கு அரசியல் தொலைநோக்கு இல்லை

## இ.தொ.கா. தலைவர் விமர்சனம்

கொழும்பு, மே 04

இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விமர்சிப்பதற்கு சுமந்திரனுக்கு அரசியல் தொலைநோக்கு தெரியாது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி முடிவுறும் தருவாயில் உள்ள நிலையில் அரசாங்கத்தில் இருந்து வெளியேறியதாக சுமந்திரன் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைப் போல் வாயில் அரசியல் பேசுபவர்கள் நாங்கள் கிடையாது.

யாழ்.பொது நூலகத்தை எரித்த ஐக் கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைந்து ஆட்சியை அமைக்க ஆதரவு வழங்க முடியும் என்றால், அதைவிட அரசாங்கத்திலிருந்து நாங்கள் வெளியேறுவது அருமை பெரிய விடயமாக அமையாது.

ஜீவன் தொண்டமானை மக்கள் பாராளுமன்றம் அனுப்பியமை மக்களுக்குவேலை செய்வதற்கே தவிர அரசாங்கத்தில் இருந்து வேடிக்கை பார்ப்பதற்கு அல்ல.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் 15 வருட காலம் இணைந்து பணியாற்றியுள்ளோம். அதேபோல் ஐக்கிய தேசிய கட்சியுடன் 20 வருடங்கள் பணியாற்றியுள்ளோம்.

எமது கொள்கை மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதே தவிர ஆட்சியாளர்கள் யார் என்பதைக் கருத்தில் எடுப்பதில்லை.

அந்த வகையில் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து நமது மக்களுக்கு தொடர்ந்தும் பணியாற்ற முடியாத சூழ்நிலையில் நேரடியாக பிரதமர் மற்றும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் அரசாங்கத்திலிருந்து வெளியேறினோம்.



சுமந்திரனுக்கு நான் பகிரங்கமாக சவால் விடுகிறேன். நீங்கள் உங்கள் மக்களுக்கு ஆற்றிய சேவையை நான் மாகாணசபை அமைச்சராக இருந்து ஆற்றிய சேவையுடன் முடிந்தால் ஒப்பிட்டுப் பார்க்க வாருங்கள். 12 வருட காலமாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை பற்றி பேசுகிறீர்கள். அதனை நிறைவேற்ற முடியவில்லை.

சிறையில் அரசியல் கைதிகள் வாழ்கின்றார்கள். அவர்களை கூட கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் விடுவிக்க முடியவில்லை. இரவில் பிரதமரையும் ஜனாதிபதியும் சந்திக்கும் சிலரால் மக்களின் தேவைகளை பற்றி பேச முடியாமை கவலை அளிக்கிறது-என்றார். (அ)

# மதுபானங்களின் விலை அதிகரிப்பு!

கொழும்பு, மே 04

மதுபான போத்தல் ஒன்றின் விலை 80 ரூபாவினாலும், பீர் போத்தல் ஒன்றின் (ஒரு கேன்) விலை 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது என மதுபான நிறுவனம் கலால் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

போக்குவரத்து, மூலப் பொருட்கள் உள்ளிட்ட செலவுகள் அதிகரித்து வருவதால், மதுபானம் மற்றும் பியர் நிறுவனங்கள் விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளன. (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 - 04 - 1936



மறைவு
28 - 04 - 2022

### திருமதி சுப்பிரமணியம் பராசக்தி

யாழ். நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பரந்தனை வசிப்பிடமாகவும், இத்தாலி Milan ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பராசக்தி அவர்கள் 28.04.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னர் நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற பொன் னர் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும்,காலஞ்சென்ற தவயோகலக்சுமி மற்றும் நித்தியலக்சுமி, காலஞ்சென்ற சகுந்தலா தேவி மற்றும் தியாகேசன், பாக்கியலக்சுமி, வாகேசன், விஜயலக்சுமி, காலஞ்சென்ற சுந்தரேசன் மற்றும் ரமேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,காலஞ்சென்ற கனகநாதன் மற்றும் ஜெயகாந்தராஜா, காலஞ்சென்ற தங்கராசா மற்றும் கேசவராணி, வசந்தகுமார், சிவறஞ்சனி, இராசேந்திரன், கிருஷாந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,காலஞ்சென்ற தங்கம்மா, சோமசுந்தரம், மனோன்மணி, செல்லம்மா, கணபதிப்பிள்ளை, கிருஷ்ணசாமி, கமலாம்பிகை, தருமலிங்கம் மற்றும் சங்கரலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற தங்கமுத்து, சின்னம்மா, மார்க்கண்டு, வீரவாகு, சின்னத்தம்பி, இராசரெத்தினம், சோமசுந்தரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும்,காலஞ்சென்ற பிரகாஸ் மற்றும் பிரகாமி, ரமேசன், பிரதீப், கஸ்தூரி, பிரியங்கன், சகானா, சங்கீதா, நிஷாந்தன், சிந்துசன், கவ்யா, விதுர்சன், அபிராமி, பூரணி, வேணுசன், அபிராம், அபிஷனா, விஜந்தன், சுரேகா, விருஷன், துர்ஷா, வினோஜன், விஷ்ணுஜன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேத்தியும்,மான்சி, சித்தார்த், இயல், வேல், ப்ருதீவ், அத்விக், ஜஸ்வினி, ரித்விக், அகானா, லேனா, இமயா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

கிரியை
Saturday, 07 May 2022 10:00 AM
Casa funeraria Domus Pacis Via Guido Rossa, 11, 20037 Paderno Dugnano MI, Italy

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**வாகேசன் - மகன்** Mobile : +4560132934
**விஜயலக்சுமி - மகள்** Mobile : +33615877897

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
03 - 08 - 1935



மறைவு
30 - 04 - 2022

### திருமதி நாகரட்னம் விஸ்வலிங்கம்

யாழ். மானிப்பாய் தெற்கைப் பூர்வீகமாகவும், மன்னார் விடத்தல் தீவைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நாகரட்னம் விஸ்வலிங்கம் அவர்கள் 30.04.2022 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பர் பொன்னையா(விதானையார்), பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சிற்றம்பலம், இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிற்றம்பலம் விஸ்வலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், அரியமலர், சுப்பிர மணியம், தர்மலிங்கம் மற்றும் மனோன்மணி(லண்டன்), சண்முகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,காலஞ்சென்ற இரத்தினசிங்கம், பொன்னம்பலம், சச்சிதானந்தம், இராசபூபதி, அன்னலட்சுமி, அன்னப்பா, தங்கம்மா, திலவதி, பாலராஜா, கந்தமூர்த்தி மற்றும் யோகேஸ்வரி(சுவிஸ்), செலஸ்ரினா(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,சுதாகரன்(பிரான்ஸ்), சிவாகரன் (பிரான்ஸ்), சுதாமதி(லண்டன்), அபயகரன்(லண்டன்), சுமித்திரா(லண்டன்), பிரபாகரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆனந்தரூபி (பிரான்ஸ்), பிரான்சுவாஸ்(பிரான்ஸ்), விஜயராஜா(லண்டன்), நர்மதா (லண்டன்), விக்னேஸ்வரன்(லண்டன்), மீனா(லண்டன்) ஆகியோரின் அருமை மாமியாரும்,அயிலோன், சிந்தியா, வினுசன், விஷ்வந், கௌசிகன், விபூதன், மெலனி, பிராஹ்மி, சதூசினி, அஸ்விதா, யோஹான், ஹரினி, திவ்வியன், சந்தோஷ், ஹஸ்மி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
சுதாகரன் (சுதா) - மகன் Mobile : +33606799527
சிவாகரன் (பபா) - மகன் Mobile : +33615325608
அபயகரன் (அபயன்) - மகன் Mobile : +447950446649
பிரபாகரன் (பிரபா) - மகன் Mobile : +447746190467
சுதாமதி - மகள் Mobile : +447478728252
சுமித்திரா - மகள் Mobile : +447507997752

## இலங்கை...

அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளது. இந்நிலையில், இலங்கை மக்களுக்கு உதவி செய்ய தமிழகத்தி லிருந்து பொருள்களை அனுப்ப மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில், தமிழக முதல்வர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது:

இலங்கையில் தற்போது நிலவி வரும் கடும் பொருளாதார சூழ்நிலையில் கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ள மக்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் அனுப்பி வைக்கப்படும் என்று அறிவித்து இருந்தேன்.

இதற்கான மத்திய அரசின் அனுமதியும் தற்போது கிடைத்துள்ளது. இதன் முதற்கட்டமாக தமிழ்நாட்டில் இருந்து 40 ஆயிரம் தொன் அரிசி, 500 தொன் பால் பவுடர் மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் விரைவில் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

இந்த சூழ்நிலையில் வாடும் மக்களுக்கு உதவிடும் வகையில் நல்லெண்ணம் கொண்ட அனைவரும் நம்மால் இயன்ற உதவியினை செய்ய வேண்டிய தருணம் இது. எனவே மனிதாபிமான அடிப்படையில், இலங்கை மக்களுக்கு தேவையான உதவிகளை செய்திட நன்கொடைகள் வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் வழங்கிடும் உதவிகள் இலங்கை மக்களுக்கு தேவையான பொருட்களாக வாங்கி அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்கொடை வழங்க விரும்புவோர் பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் வழங்கலாம்.

A. மின்னணு பரிவர்த்தனை மூலம் நன்கொடை வழங்க விரும்புவோர்:- 1. மின்னணு பரிவர்த்தனை: https://ereceipt.tn.gov.in.cmprf/cmprf.html வங்கி : இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வங்கி கிளை : தலைமைச் செயலக கிளை சென்னை - 600 009 சேமிப்பு வங்கி கணக்கு எண்: 117201000000070 IFSC குறியீடு : IOBA0001172 CMPRF பான் எண் : AAAGC0038F SWIFT குறியீடு : IOBAINBB001 இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மத்திய அலுவலகம், சென்னை. (வெளிநாட்டு பங்களிப்புகளுக்கு). ECS மூலம் ஒன்லைனில் தொகையை அனுப்பும் பங்களிப்பாளர்கள், அவர்கள் வருமான வரி விலக்கு பெறுவதற்கும் அதிகாரபூர்வ ரசீதை அனுப்புவதற்கும் பின்வரும் விவரங்களை தயவுசெய்து வழங்கவும்:- பங்களிப்பாளரின் பெயர் : பங்களிப்பு தொகை : வங்கி மற்றும் கிளை : பணம் அனுப்பும் திகதி : பரிவர்த்தனை குறிப்பு எண்: தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : மின்னஞ்சல் முகவரி : தொலைபேசி எண் / கைபேசி எண். : UPI-VPA id : tncmprf@iob மற்றும் PhonePe, Google Pay, Paytm, Amazon Pay, Mobikwik etc. போன்ற பல்வேறு மொபைல் செயலிகள்.

B. காசோலை, வரைவு காசோலை மூலம் நன்கொடை வழங்க விரும்புவோர்:- The Joint Secretary to Government & Treasurer, Chief Minister's Public Relief Fund, Finance (CMPRF) Department, Secretariat, Chennai 600 009, Tamil Nadu, India. அரசு இணைச் செயலாளர் & பொருளாளர், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி, நிதி(மு.பொ.நி.நி) துறை, தலைமை செயலகம், சென்னை 600 009, தமிழ் நாடு, இந்தியா.

என்ற முகவரிக்கு காசோலையாகவோ, வரைவு காசோலையாகவோ அனுப்பிவைக்கலாம். அனுப்பி வைக்கப்பட வேண்டிய இவற்றை அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் வழங்கலாம்.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதி வழங்குவோர் 80- G ன் கீழ் வருமான வரி விலக்கு பெறலாம். (அ)

## அவுஸ்திரேலிய...

உபகரணங்கள், உட் கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்கும் 18.8 மில்லியன் டொலர் திட்டத்துக்கு ஒஸ்பென் மெடிக்கல் நிறுவனம் அவுஸ்ரேலிய அரசாங்கத்திடமிருந்து அனுமதியை பெற்றுள்ளது.

இலங்கையில் ஒஸ்பென் மெடிக்கலின் முதல் 2.1 மில்லியன் டொலர் பரிவர்த்தனையானது பிரித்தானிய விர்ஜின் தீவுகளில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமான சேபர் விஷன் ஹோல்டிங்ஸ் இடையில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் நிமல் பெரேராவுக்குச் சொந்தமான இந்த நிறுவனம் இலங்கையில் உள்ள ராஜபக்ஷ குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளதாக ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

ராஜபக்ஷ குடும்பத்துடன் தொடர்பு வைத்திருந்த நிமல் பெரேரா என்ற இடைத்தரகருக்கு இந்த நிறுவனம் சொந்தமானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பரிவர்த்தனை காரணமாக கடந்த 2016 ஆம் ஆண்டில், பண தூய் தாக்கல் குற்றச்சாட்டில் நாமல் ராஜபக்ஷவை கைது செய்ய அது வழிவகுத்ததாகவும் ஏபிசி நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் குறித்த இரண்டு நிறுவனங்களுக்கு இடையேயான பரிவர்த்தனையில் எவ்வித சம்பந்தமும் கிடையாது என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் முன்வைத்த இந்த குற்றச்சாட்டு தொடர்பாக இன்னும் தான் நீதிமன்றத்துக்கு செல்வதாகவும் இதில் யாருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பஸிலின்...

நில்வால திட் டத்துடன் சீனா சி.ஏ.எம்.சி இன்ஜினியரிங் கோ லிமிடெட் ஒப்பந்தம் மிகவும் பிரபலமற்ற ஒப்பந்தங்களில் ஒன்றாகும்.

சீனா சி.ஏ.எம்.சி இன்ஜினியரிங் கோ லிமிட்டெட் ஹொங்கொங்கில் வங்கிக் கணக்கு ஒன்றினை வைத்திருக்கும் நிலையில், அது தனித்தனி சந்தர்ப்பங்களில் 5 மில்லியன் டொலர்களை ரூட் இன்டர்நஷனலுக்கு வழங்கியுள்ளது.

குறித்த நிறுவனம் நடேசனுக்கு சொந்தமானது. ரூட் இன்டர்நேஷனல் நிறுவனம், கொள்ளுப்பிட்டியில் உள்ள இலங்கை வங்கிக்கு நிதியை மாற்றியுள்ளது.

அந்தக் கணக்கில் வைப்பு செய்யப்பட்ட பணத்தில் மல்வானையில் உள்ள பிரபல சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன - என்றார். (அ)

## புதிய...

நியமிப்பதற்கு 09.09. 2020 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டி ருந்தது.

அதற்கமைய, இக்குழுவின் ஆரம்ப அறிக்கை 25.04.2022 அன்று ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்களை ஆராய்ந்து உகந்த பரிந்துரைகளை அமைச்சரவைக்கு முன்வைப்பதற்காக கீழ்க்காணும் அமைச்சர்களுடன் கூடிய உபகுழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

1. பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் (வெளிவிவகார அமைச்சர்) - (தலைவர்)

2. தினேஷ் குணவர்த்தன (அரச பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர்)

3. டக்ளஸ் தேவானந்தா (கடற்றொழில் அமைச்சர்)

4. ரமேஷ் பத்திரன (கல்வி மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்)

5. அலி சப்ரி (நிதி மற்றும் நீதி அமைச்சர்). (அ)

# 1600 கோடி ரூபாய் வழங்குகிறது சீனா!

கொழும்பு, மே 04

இலங்கைக்கு 30 கோடி யுவான் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 1600 கோடி ரூபாய் (இன்றைய மதிப்பில்) நிதி உதவியாக வழங்க சீன அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் சீனப் பிரதமர் லீ கெகியாங்கும் அண்மையில் தொலைபேசியில் பேசியதைத் தொடர்ந்தே இந்த அறிவிப்பு வெளியானது. (ஐ)

## இன்று...

புதிய இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும். இதில், அரசாங்கத்தை விட்டு விலகி தனித்து இயங்கும் உறுப்பினர்களும் இணைவார்கள். நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் ஆளும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன, அரசாங்கத்திலிருந்து வெளியேறி தனித்து இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர்.

இந்த சந்திப்பில் பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி, ஜே. வி. பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிறுபான்மை கட்சிகள் எவையும் பங்கேற்கவில்லை.

இந்தப் பேச்சில், ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் தொடர்வார், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் அமைச்சரவையும் விலகி புதிய இடைக்கால அரசு அமையும், அத்துடன், 10 பேர் கொண்ட அமைச்சரவையும் பதவியேற்கும், 19ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்ற இணக்கங்களும் எட்டப்பட்டன எனத் தெரிய வருகின்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது, டலஸ் அழகப்பெரும பிரதமராக நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது. எனினும், தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கௌரவம் அளிக்கும் விதமாக சிறீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் எவரும் பிரதமர் பதவிக்கு நிறுத்தப்படமாட்டார்கள் என்று அந்தக் கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷ அறிவித்தார். இதனால், டலஸ் அழகப்பெரும பிரதமராக பொறுப்பேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால், மற்றோர் இணக்கப்பாட்டின்படி சுதந்திரக் கட்சியின் உபதலைவர் நிமால் சிறீபால டீ சில்வாவை பிரதமராக நியமிக்கப்படலாம் என்றும் கூறப்பட்டது. முன்னதாக பிரதமர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் சிபாரிசு செய்யப்பட்டது. ஆனால், புதிய இடைக்கால அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தயாராகவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் 10 உறுப்பினர்கள் ரணில் விடயத்தில் உடன்படவில்லை என்று கூறப்படுகின்றது. இதனால், நிமால் சிறீபால டீ சில்வா நியமிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், புதிய இடைக்கால அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை சிறீ லங்கா பொதுஜன பெரமுன பெறுமா என்பது தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இதேசமயம், இந்த மாற்றங்கள் நாட்டில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை நிறுத்த உதவுமா என்பது சந்தேகமே. இது ஒருபுறமிருக்க நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் ஹர்த்தால் போராட்டத்தை முன்னெடுக்கவும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிறிலங்கா...

அமைப்பாளராக பஸில் ராஜபக்ஷவும் பதவி வகித்து வருகின்றனர். கட்சியின் ஏனைய பதவிகள் அனைத்தும் பஸில் ராஜபக்ஷவின் ஆதரவாளர்களால் நிரப்பப்பட்டு உள்ளதாக பின்வரிசை உறுப்பினர்கள் குற்றம் சுமத்தி உள்ளனர்.

எனவே, மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றவுடன் பொதுஜன பெரமுனவின் புதிய தலைவராக கோட்டாபய ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என்று அக்கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. (அ)

## ராஜபக்ஷக்களின்...

“கோட்டா கோ கம“ போராட்டத்தை நடத்தும் குழு வேண்டுகோள் விடுத்து உள்ளது.

கண்டியில் உள்ள மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை நேற்று செவ்வாய்க்கிழமை “கோட்டா கோ கம“ போராட்டக் குழு உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது அவர்கள், அடக்குமுறை, அநீதி, அநாகரிகமான ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக சங்க ஆணை பிறப்பிக்குமாறும் பிரதம பீடாதிபதிகளிடம் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

அத்துடன், ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கௌரவங்களை நீக்க வேண்டும், அந்தக் குடும்பத்தின் இறுதிச் சடங்கில் செய்யப்படும் சம்பிரதாயங்கள் எதிலும் கலந்து கொள்ளக் கூடாது என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## நாளை...

அரசியலில் ஈடுபடுவதற்கான புதிய வாய்ப்பை வழங்குவதும் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த புதிய நிர்வாகத்தை வழங்குவதுமே யதார்த்தம் என தெரிவித்தார்.

இலங்கைக்குள் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கான ஒரே தீர்வு அரசியல் ஸ்திரத்தன்மையே என அவர் வலியுறுத்தினார்.

அதேபோல மக்களின் வெற்றியை எதிர்பார்த்து இந்த ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய தொழிற் சங்க மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

## நம்பிக்கையில்லா...

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழாமும் பங்கேற்றன. (ஐ)

## ஐ. தி. சம்பந்தன்...

கருமான ஐ. தி. சம்பந்தன் நேற்று லண்டனில் காலமானார்.

1962களில் யாழ்ப்பாணத்தில் ‘சிற்பி’யை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ‘கலைச்செல்வி’ என்ற சஞ்சிகையில் இணைந்து கடமை புரிந்த சம்பந்தன் தொடர்ந்தும் கலை, கலாசாரம், இலக்கியம், சமூகம், அரசியல் போன்ற பல்வேறுபட்ட விடயங்களைத் தாங்கி வரும் சர்வதேச தமிழ்ச் சஞ்சிகையான ‘லண்டன் சுடரொளி’யின் பிரதம ஆசிரியராகச் செயல்பட்டவர்.

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட சம்பந்தன் தமிழ் தேசிய கூட்டமைப்பு லண்டன் கிளை ஸ்தாபகர். மரணிக்கும்போது அவருக்கு வயது 87. (ஐ)

## நம்பிக்கையில்லா...

அவருக்கு எதிரான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் அரசாங்கம் பதவி விலக வேண்டியிருக்கும்.

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் ஜனாதிபதிக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள பதவி நீக்கப் பிரேரணை ஆகியவற்றில் கடந்த மாதம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கையொப்பமிட்டார். தொடர்ந்து தற்போது 120 வரையான எம்.பிக்கள் இந்தப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# தேசிய அரசு அமைக்க சஜித், அனுர மறுப்பு!

## கூறுகிறார் வாசுதேவ

கொழும்பு, மே 04

தேசிய ஒருமித்த அரசில் இணைய ஐக்கிய மக்கள் சக்தியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைய மறுத்து உள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

தேர்தலை நடத்துமாறு கோருகின்ற போதிலும், தற்போது தேர்தலை நடத்துவதற்கு அரச தலைவருக்கு அதிகாரம் இல்லை.



ஆறு மாதங்களில் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் அரச தலைவருக்கு உள்ளது.

அல்லது நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்றி பாராளுமன்றத்தை கலைக்க முடியும். எவ்வாறாயினும், எவருக்கும் போதிய வாக்குகள் இல்லை.

இந்த தருணத்தில் மக்கள் தேர்தலை கோரவில்லை. சஜித்துக்கோ அல்லது அநுரவுக்கோ மக்களின் வாழ்க்கை சுமையை குறைக்க ஆர்வம் இல்லை-என்றார் அவர்.

## திருமலையில் திடீரென மயங்கி விழுந்த இளைஞர் உயிரிழப்பு

திருமலை, மே 04

திருகோணமலை-உப்பு வெளி-கன்னியா மாங்காய் ஊற்று பகுதியில் திடீரென மயங்கி விழுந்த இளைஞன் உயிரிழந்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை பாலை யூற்று பூம்புகார் பிரதேசத்தில் வசித்துவந்த கே.வசந்தன் (வயது 34) என்பவரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர் நேற்றுமுன்தினம் நண்பகலில் வெயிலில் வேலை செய்து கொண்டிருக்கும் போது குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தற்போது சடலம் திரு கோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோத னைக்கு பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட உள்ள தாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த நபர் உயிரிழந்தமைக் கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## யோசித ராஜபக்ஷ பெயரில் 32 இடங்கள் கொள்வனவு!



கொழும்பு, மே 04

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகனான யோசித ராஜபக்ஷவின் பெயரில் 32 இடங்கள் கொள்வனவு செய்யப் பட்டுள்ளதாக ஜே.வி. பியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மன்றக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற மோசடிகளை வெளிக்கொணரும் நிகழ்விலேயே அவர் இதனை வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவன்கார்ட் நிறுவத்துடன் கடற்படையினர் செய்துக் கொண்ட உடன்படிக்கையின்படி 25வீத வருமானம் கடற்படைக்கு தரப்படவேண்டும்.

எனினும் முன்னர் கடற்படை தளபதிகள் சிலர், கடற்படைக்கு வரும் வருமான வீதத்தை குறைத்தனர்.

அதாவது அவன்காட் நிறுவனத்துக்கு கிடைக்கவேண்டிய வருமானம் அதிகரிக்க செய்யப்பட்டது.

இதற்கு பதிலாக குறித்த முன்னாள் தளபதிகள் ஓய்வு பெற்றதும் அவர்களுக்கு அவன்கார்ட் நிறுவனத்தில் தொழில் வழங்கப்பட்டது.

மற்றும் ஒரு ஊழல் நடவடிக்கையின்போது அமைச்சர் ஒருவர் தமது காலம் முடிவடைந்து வாகனத்தை அமைச்சுக்கு திருப்பி கொடுத்தபோது, அதில் உள்ள இயந்திரத்துக்கு பதிலாக பழுதடைந்த இயந்திரம் பொருத்தப்பட்டு அது திருப்பிக் கொடுக்கப்பட்டது-என்றார்.

அதேநேரம் நாமல் ராஜபக்ஷ தொடர்பான மோசடி ஆவணம் தம்மிடம் இருப்பதாக கூறிய அனுரகுமார, "சந்தஹிரு செய" என்ற படையினரின் நினைவகம் ஒன்றை அமைப்பதற்காக சுங்கத் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட பெருந்தொகை தங்கத்தின் மூலம் செய்யப்பட்ட ஒரு அடி உயரமுள்ள புத்தபெருமானின் சிலைக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண கடலில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 45 கிலோ தங்கம் சுங்கத் திணைக்களத்திடம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் 24 மணித்தியாலங்களுக்குள் சுங்கத் திணைக்களத்துடன் பேசிய அப்போதைய கடற்படைத் தளபதி, சிலை ஒன்றை நிறுவுவதற்காக கைப்பற்றப்பட்ட தங்கத்தில் 8 கிலோவை தருமாறு கேட்டுள்ளார்.

எனினும் ஒரு மாதம் கழித்த பின்னர் எவரும் உரிமை கோராதவிடத்தே அதனை தரமுடியும் என்று சுங்கத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பதிலாக ஏற்கனவே உரிமை கோரப்பட்டதாக தங்கம் மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட தங்கங்களினால் இந்த சிலை நிர்மாணிக்கப்பட்டது.

எனினும் சந்தஹிரு செயவில் குறித்த தங்கச்சிலை நிறுவப்படவில்லை என்று அனுரகுமார குறிப்பிட்டார். (அ)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை; ஆதரவு வழங்க ஐ.தே.க. முடிவு

கொழும்பு, மே 04

அரசுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது. அரசு பதவி விலகவேண்டும் என்பதே மக்களின் கோரிக்கை, அந்த கோரிக்கையை ஏற்றே ,தமது கட்சி இந்த முடிவை எடுத்துள்ளது எனவும் ஐ.தே.க. தெரிவித்தது.

ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படுமானால் அது சம்பந்தமாகவும் சாதகமான நிலைப்பாட்டை கட்சி எடுக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சீனா மேலும் 300 மில்லியன் யுவான் உதவி

கொழும்பு, மே 04

இலங்கைக்கு மேலும் 300 மில்லியன் யுவான் பெறுமதியான உதவியை வழங்க சீனா தீர்மானித்துள்ளது.

அதன்படி, மருந்துகள், உணவு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும். மொத்தமாக 500 மில்லியன் யுவான்களை சீனா இலங்கைக்கு வழங்கியுள்ளதாக கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

## போராட்டக்காரர்களை விரட்ட பாதுகாப்பு தரப்பினர் திட்டம்!

### முகநூலில் பொன்சேகா பதிவு



கொழும்பு, மே 04

அலரி மாளிகை முன் பாக அமைதிப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை தாக்குவதற்கும் அவர்களை அங்கிருந்து விரட்டியடிப்பதற்கும் பாதுகாப்பு தரப்பினர் திட்டமிட்டுள்ளனர் என்று நம்பத்தகுந்த தக வல்கள் வெளியாகியுள்ளன என்று பீல்ட் மார் ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அடக்குமுறை மற்றும் பொலிஸாரின் அதிகாரம் மூலம் மக்களின் இறை யாண்மை ஒடுக்கப்படு வதை மக்கள் எதிர்க்க வேண்டும் என அவர் தனது முகப் புத்தக பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

"போராட்டக்காரர்களே ஒன்றிணையுங்கள், போராடுங்கள்" எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேசமயம், எந்தவொரு சந்தர்ப் பத்திலும் அமைதியான முறையில் போராடுபவர்கள்மீது அவ்வாறான நடவடிக்கை எடுக்கும் எதிர்பார்ப் பில்லை என்று பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ஐ)



## 30 வருடங்களாக பூட்டப்பட்டுள்ள இந்து ஆலயங்களின் சாபமே இது!

### பா.ஜ.கவின் தமிழக தலைவரிடம் சுட்டிக்காட்டினார் சிவபூமி அறக்கட்டளை தலைவர் ஆறு திருமுருகன்

யாழ்ப்பாணம், மே. 04

காங்கேசன்துறையில் எவ்வித பூசை வழிபாடுகளும் இன்றி சுமார் 30 வருடங்களுக்கு மேலாகப் பூட்டப்பட்ட இந்து ஆலயங்களின் சாபமே தற்போது நாட்டைப் பாடுபடுத்துவதாகச் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

யாழ். வந்த இந்தியப் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலையை நல்லை ஆதீன குருமுதல்வர் சன்னிதானத்தில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காங்கேசன்துறை பகுதியில் மக்களின் காணிகளைப் பறித்து ஆடம்பர ஜனாதிபதி மாளிகை கட்டியுள்ள நிலையில், மக்களை இன்னும் மீள் குடியேற்றம் செய்யவில்லை.

ஆனால் அப்பகுதியில் காணப்படும் நான்குக்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் இன்னும் பூசை வழிபாடுகள் இன்றி பூட்டப்பட்ட நிலையில், அதன் சாபங்களே இன்றைய நாட்டின் நிலைமைக்குக் காரணமாகும்.

சடையம்மா மடம், விஷ்ணு கோயில் மற்றும் சிவன் கோயில் உட்பட அப்பகுதியில் பல இந்து ஆலயங்கள் இருக்கின்ற நிலையில், ஆட்சியாளர்கள் அதனை விடுவித்து பூசை வழிபாடுகள் இடம்பெற அனுமதிக்க வேண்டும்.

நாங்கள் எவ்வித அரசியல் கட்சியையும் சார்ந்தவர்கள் அல்லர், மதத்தலைவர்கள் என்ற ரீதியில் மக்களுடைய பிரச்னைகளைத் தெளிவாக எடுத்துரைத்தோம்.

பாரத பிரதமர் நரேந்திர மோடி தமிழ் மக்கள் தீர்வு விடயத்தில் அக்கறையாக உள்ள நிலையில், அவரது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்குரிய தீர்வும் காணப்பட வேண்டும்-என்றார்.

இந்த சந்திப்பில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் உடனிருந்தார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-டார்லிங்,ஈட்டி
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்
நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10
திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகசோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு